உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௪. } பரீதாபி௵ வைகாசி௴ { பகுதி ௨.

சமாசாரப் பத்திரிகைகள்.

:o:

முற்காலத்தில் சமாசாரப் பத்திரிகை என்பதே கிடையாது. இப்பத்திரிகைகள் சமீபத்திலேயே ஏற்பட்டவைகளாகும். இவை முன்பு இல்லாமைக்குக் காரணம் எழுதா எழுத்தால் எழுதி ஆயிரக்கணக்கான பிரதிகளை அரைநாழிகையில் வெளியிடும் அச்சு யந்திரமும், அதிமலிவாகக் கிடைக்கக்கூடிய காகிதமும் அக்காலம் இருந்திராமையே. இப்பத்திரிகைகள் நாள்தோறும் பரவி வருதற்கு, நாகரீகம் விருத்தியாக விருத்தியாக, ஆவசியத்திற்கேற்ப நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்டு அமைக்கப்பட்டு வரும் தபாற்சாலை ஏற்பாடு, புகைவண்டி, புகைக்கப்பல் மின்சாரத்தந்தித் தபால், முதலியவைகளை சாதனங்களாகும். நிற்க.

இப்பத்திரிகைகள் ஆதியில் அரசாங்கத்தாராலேயே ஏற்படுத்தப்பட்டவை. அவர்கள் அவற்றை ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கம், அவற்றின் மூலமாகக் குடிகட்குத் தம் அபிப்பிராயத்தையும், தாம் செய்ய எண்ணியுள்ள ஏற்பாடுகளையும் அறிவிக்கவும் தம்மிடம் குடிகள் அநாவசியமாய்க் கொண்டிருக்கும் பீதியையும் அவநம்பிக்கையையும் நீக்கவுமே. இவற்றைத்தவிர வேறு செய்தி இவற்றின் மூலமாக வெளிவந்ததில்லை. இட்டலியில் உள்ள வெனிஸ் நகரமே முதல் முதல் இத்தகைய பத்திரிகையேனும் தோன்றிய இடமாகும். அது செய்த நன்மை நாகரீகமுள்ள இடங்களிலெல்லாம் சிறிது சிறிதாகப் பரவவே, ஐரோப்பாவில் ஒவ்வொரு ராஜாங்கத்திலும் இத்தகைய பத்திரிகை ஏற்படுத்தப்பட்டதாம். இந்தியாவில் சர்க்கார் மூலமாக வெளியான முதல் சமாசாரப் பத்திரிகை "இந்தியன் கேஜட்." இது 1744௵ தோன்றியது.

இத்தகைய பத்திரிகைகள் ஏற்படு முன்னர், துரைத்தனத்தார் தம் கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் தெரிவிக்க வேண்டுமாயின், தெருக்கள்தோறும் பறையனறவித்து ஜனங்களை ஆங்காங்குக் கூட்டி அவர்களுக்கு அறிவித்தல் வழக்கம். இப்பொழுதும் கிராமாந்தரங்களில் இத்தகைய வழக்கம் இருந்தலை யாரும் காணலாம்.

சர்க்கார் அறிவிக்கும் சமாசாரங்களைத் தவிர உள்ளூர் பிறவூர் வர்த்தமானங்களையும் அறியப் பிரியங் கொண்டோரது எண்ணம் பின்வரும் விதத்தால் ஒருவாறு நிறைவேறிவந்தது. செல்வவந்தரும் வர்த்தமானப் பிரியருமான சிலர் பொருள்மிகுதியும் செலவழித்து, ஆங்காங்கு தக்க நிரூபகேயர்களை நியமித்து அவர்கள் அதிகக் கஷ்டப்பட்டு எழுதும் சமாசாரங்களைப் பெற்றுத் தமக்குச் சந்தா செலுத்தும் ஜனங்களை ஓரிடத்திற் கூட்டி, மேற்படி விஷயங்களை அவர்கள் முன்னிலையில் வாசித்தேனும், அல்லது தனித்தனி அவர்களுக்கு ஆள்மூலமாய் அச்சமாசார ஓலையை அனுப்பி வாசிக்கச் செய்தேனும் வந்தார்கள். இதே வழக்கம் தற்காலத்திலும் நாகரீகம் நன்கமையாத பாரவசீகமாதிய இடங்களிற் பரவியிருத்தலைக் காணலாம்.

தற்காலம் இவ்வித கஷ்டமேதுமில்லை. பத்திரிகைகள் கேவலம் சர்க்கார் பிரசுரமாகமட்டும் இராமல் பெரும்பாலும் குடிகளின் பிரசுரமாகவே இருக்கின்றன. துரைத்தனத்தாரையும் வசப்படுத்தும் ஆற்றல் இவைகட்குண்டு. முத்தொழில்களும் இவைகட்குள்ளன. இவை செய்து வரும் காரியங்கள் அநந்தம்.

உள்ளூர் வர்த்தமானம், அரசினர் அபிப்பிராயம் ஆகிய இவைமட்டுமேயன்றி இன்றைக்கு இந்த நிமிஷத்தில் இந்தியாவிலோ, ஆஸ்திரேலியாவிலோ, அமெரிக்காவிலோ, ஆபிரிக்காவிலோ, அல்லது ஆசியாவின் பிறபாகங்களிலோ நடக்கும் எவ்வித முக்கியவிஷயங்களும் அவைநிகழ்ந்த ஒரு மணி நேரத்திற்குள் பத்ரிகாசாலை புக்கு, இரண்டொரு மணிக்கெல்லாம் பத்திரிகை வாயிலாய் வெளியாய் விடுகின்றன. மின்சாரத்தபாலின் விநோதம் தான் என்னே!

இம்மட்டோ? அரசியல், நீதி, ஒழுக்கம், மதம், ஜனசமூகச் சீர்திருத்தம், ஆசாரசீர்திருத்தம், கல்வி, கைத்தொழில், பூத

பௌதீக ரசாயன வான சாஸ்திரங்கள், கற்றுய்ந்த புலவரியற்றிய நூல்கள். இவைசம்பந்தமாயும் நவநவமாய்க் கண்டுபிடிக்கப்படும் விஷயங்களைக் குறித்தும் இப்பத்திரிகைகள் ஆசாரிய ஸ்தானத்திலிருந்து தம்மை நாடிப்படிப்போர்க்குப் போதித்தும், நீதிஸ்தல வர்த்தமானங்களை அறிவித்தும் அவர்களுடைய அஞ்ஞானத்தை நீக்கி அறிவுச் சுடர்கொளுத்தி நல்வழிப்படுத்துகின்றன.

அன்றியும் இவை சுதேசாபிமானத்தை வளரச்செய்து, அரசவிசுவாசத்தை அதிகப்படுத்திக் கொடுங்கோன்மையை விலக்கி, எல்லாம் வல்ல இறைவனே போன்று துன்புறுவோர்க்குத் துணைபுரிந்து துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்து வருகின்றன.

தவிரவும், உயிர்நிலைத்திருப்பதற் கின்றியமையாத மருந்துகள் கிடைக்குமிடத்தை அறிவிப்பதோடு, வணிகமக்களுக்கு ஆங்காங்கு கிடைக்கும் பொருள், அவை கிடையா இடங்கள், அவை மலிவாய்க் கிடைக்கும் இடங்கள் முதலியவற்றை அறிவித்து அவர்களை மிக்க செல்வவான்களாக்குகின்றன.

இன்னும் இவை தீயனபுரிந்தாரது செய்கை, பெயர், அவர்க்குற்றதண்டனை முதலியவற்றைத் தெரிவித்து மனிதர்களை நன்னெறியிற் புகுத்துகின்றன. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இதுகாறும் கூறியவற்றால் எந்த ஊர்க்குமே பத்திரிகைகளால் மிக்க பயன் உண்டு என்பது நன்கு புலப்படும். ஆனால் நம் இந்தியாவிற்கோ இவை இன்றியமையாதன. ஏனெனில் நம்மை ஆளுவோர் அந்நியர். அவர்கள் பாஷை வேறு, நமது பாஷைவேறு. நம்மிற் பெரும்பான்மையோர் அவர்கள் பாஷையை அறிய ஆற்றலில்லாதாரே. ஆதலின் குடிகளின் குறையைக்கூறவும் அரசினர் கருத்தை அறியவும், வரி, ஆட்சிமுறை இவைகளைப்பற்றி அவர்களுக்குப் பரஸ்பரம் உள்ள அபிப்பிராய பேதங்களை நடுநிலைமையிலிருந்து ஆய்ந்து இருதிறத்தாரையும் ஒருமையாக்கும் பெற்றிவாய்ந்த நுட்ப புத்தியும் தீர்க்காலோசனையும் வாய்ந்தோரை அதிபர்களாகக் கொண்டுள்ள பத்திரிகைகள் இருத்தல் அவசியம். சர்க்கார் சார்பில்நின்று ஜனங்களை நிஷ்காரணமாய் இகழ்ந்து பேசியும், கண்டபடி கவர்ன்மெண்டாரைக் காரணமின்றி எதிர்த்துக் கல்லைக்கிள்ளிக் கைநோவார் போல் தம்மையும் பிறரையும் துன்பத்திற்குள்ளாக்கியும்

வரும் பத்திரிகைகள் போலிப் பத்திரிகைகளே. இவை பூக்தலிற் பூவாமை நன்று. நிற்க.

விரைவிற் செய்யப்படும் பிரசங்கங்களையுங்கூட அதிவிரைவிற் குறித்துக் கொள்ளக்கூடிய சுருக்க எழுத்து (Short-hand) முறையும் நம் சுயபாஷையில் ஏற்பட்டுவிட்டது. ஆயினும் அதி சொற்பச்செலவு செய்து பத்திரிகைகளை விரும்பிப் பெற்றுப் படிப்போரைத்தான் காண்பதரிதாயிருக்கிறது. ஐயோ! இங்கிலாந்தில் வெளியாகும் டெய்லிகிராபிக் அல்லது டைம்ஸ் பத்திரிகையை ஒருபென்னி கொடுத்து வாங்கிப்படியாமல் கூலிக்கு வேலைசெய்வோனும் இருக்கமாட்டானே! இத்தகைய அபிமானமும் அவ்வபிமானத்தால் நானுவிதத்தும் அடையும் அறிவும், அவர்கட்கிருத்தலாலன்றோ அவர்கள் இக சுகம் யாவுமெய்தி எவரினும் மேம்பட்டிருக்கின்றனர். ஜப்பானின் உயர்வுக்குக் காரணமும் இதுதானே? நம்நாட்டில் எத்தனைபேர் சுயபாஷைப் பத்திரிகைகளை ஆதரித்துவருகின்றனர்? ஆதரிப்போரின்றி எவ்வாறு பத்திரிகைகள்நடைபெறும்? ஆதரியாவிடினும் படிக்க அவாவாவது நம்மவரிற் பெரும்பான்மை யோர்க்கு உண்டா? இல்லை. இல்லை. ஆதரிப்பதாகப் பிறரை நம்பச் செய்து போலிப் புகழ்ச்சி கட்டிக் கொள்ளும் புண்ணியவான்களாவது தம் சந்தாத்தொகையைச் சரிவரக் கொடுத்து வருகிறார்களா? அதுவுமில்லையே. ஆனால் இவ்வவமானத்தை ஒருவாறு நீக்கவே கடவுள் மகாராஷ்டிர பாஷையில் வெளியாகும் "கேஸரி" போன்ற பத்திரிகைகளைத் தோன்றச் செய்தார்போலும்! அரையணுத்தந்து அப்பத்திரிகையின் பிரதியைப் பெற்று வாசியாமல் அங்கு ஒரு க்ஷவரகனும் இருக்கமாட்டான். தமிழ்நாடும் அத்தகையபாக்கியம் பெறுவது எந்நாளோ? தமிழ்பேசுவோர் தொகை கோடியேநாற்பத்தைந்து லட்சம். ஆயினும் தமிழ்ப்பத்திரிகைகள் வருவித்துப் படிப்பார் 5000 பேர்களாவது இருப்பரோ என்று ஐயமுறுகின்றேம் பலசொல்லினென்? யாவர்க்கும் எளிதில் பொருள்விளங்க இனியநடையில் எழுதப்பட்டுவரும் தினசரியாகிய சுதேசமித்திரன் போன்ற பத்திரிகைகள் பல தோன்றவும், நம்மவர்க்கு தேச க்ஷேமத்திலும் பாஷாபிவிருத்தியிலும் பத்திரிகாபிமானத்திலும் கவலையும் கருத்துமுண்டாகவும் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

சிந்தாமணி சரித்திரம்.

(22-ம் பக்கத் தொடர்ச்சி.)

———மீ தரார்

அற்பில் நின்றன அறங்களன்னவர்
கற்பில் நின்றன காலனாமாரியே”

என்று கவிஞர் கோமானாகிய கம்பனும் மொழிந்திருக்கின்றானல்லவா? தாங்கள் புகன்றது வேதவாக்கியம் போல் என் மனத்துட்புகுந்து என் சந்தேகம் முழுமையையும் அகற்றிவிட்டது. மகா மேதாவியென்று புராணங்களினால் புகழ்ப்பெற்ற நளச்சக்ரவர்த்தி அறிவின்மையால் நாட்டையிழந்து கபடமாக மனைவியையும் அகற்றிவிட்டு வேறோர் அரசனுக்குள் ஈனமான தொண்டுபுரிந்து நின்ற காலத்தும் கற்புநிலைதவறாது மதியின் வலியினால் அவனை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்து அவன்முன்போல் முடிதரித்து அரசியல் புரிந்து வாழும்படி அமைத்தவள் அவன் மனைவியாகிய தமயந்தியல்லவா? சத்தியவானுடைய உயிரைக்கவர்ந்த எமன் கையிலிருந்து அதைவிடுவித்து அவனுக்கு மேன்மையையும் ஒப்பற்ற வாழ்வையும் உதவியது அவன் மனைவியாகிய சாவித்திரியின் பதிவிரதமல்லவா? உலகந்தோன்றிய காலமுதல் மாதருடைய கற்பே அவ்வுலகம் நிலைத்திருப்பதற்குக்காரணமாக விருந்திருக்கின்றது. இந்தக்காலத்திலும் அந்நியதேசத்தின் நாகரீகம், படிப்பு, நடையுடை பாவனைகளினால் நம்நாட்டின் ஆண்மக்களுடைய மனோவிருத்தி பலவாறாகச் சிதறிப்போய் ஜாதி, வர்ணாசிரமம், குலதர்மம் முதலியவற்றை மறந்து பஞ்சமர்போற் பழிப்புற்று நிற்கினும், அவர்களுடைய அலங்கோலமான நடத்தைகளெல்லாம் அவர்களுடைய வீடுகளுக்குள் நுழைய முடியவில்லை. ஆலயந்தொழுதலை அறிவாளிகளாகிய கணவர்கள் நிந்தித்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் மனைவிமார்கள் காலந் தவறாது கோயிலுக்குச்சென்று பக்தியுடன் இறைவனை வழிபாடுசெய்வதையும், தீட்டு, எச்சில் முதலிய அசுத்திகளுக்கு உட்படாமல் எக்காலமும் ஆசாரத்தையே அநுசரித்து நடப்பதையும், நாம் எங்கும் பார்க்கவில்லையா? சிராத்தம், சுமங்கலிப்பிரார்த்தனை தேவாராதனை முதலியனவெல்லாம் மிகப் படித்தறிந்த ஆண்மக்களுக்கு வீண்காரியங்களாக முடிந்து விட்டன. ஆயினும், அவைகளைக் கைவிடாது

அவரவர் பூர்வீக குலாசரணைகளுக்கு இணங்கி மங்கையர்கள் சிர
த்தையுடன் நடத்திவருவதில்லையோ நம்நாட்டில் சிராத்தமும்
ஸுமங்கிலியப் பிராத்தனையும் தேவாராதனையும் அழியாமல் நடந்து
கொண்டிருக்கின்றன? தங்கள் மனைவிகளுடைய நிர்ப்பந்தத்திற்காக
கங்காயாத்திரை முடிக்கப்போய்ப் புனிதமானகங்கைநதியில் தங்கள்
மனைவிகளும் மற்றைய பெண்டிர்களும் தங்கள் பாபம் தீரத்தலை
மூழ்கி மனத்தூய்மையுடன்நிற்கக் கங்கைக்கரையிலேயே வெந்நீரில்
ஸ்நானம்செய்து தங்கள் மனைவி முதலியோருடைய மடமையைப்
பரிகாசம் செய்த எத்தனை புத்திமான்களைப்பற்றி நாம் கேட்டிருக்
கின்றோம். நிற்க

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை'

என்ற மேலான நீதிவசனம் ஞாபகத்தில் இல்லையா? அக்நி மனைவி
யினுடையகையில் இருக்கின்றதென்றும் அவளை விட்டொழிந்த
கணவன் எக்கருமத்தைச் செய்யவும் தகுதியற்றவனென்றும் சாஸ்
திரங்கள் வீணாகவா கூறுகின்றன? வெகு இடங்களில் கணவர்கள்
நெறியழிந்து விபசாரம் முதலிய துர்நடைத்தைகளில் மூழ்கிப்
பாழாகி நிற்கும்பொழுது அவர்களுடைய இழிவான நடத்தைகளுக்
காக அவர்களை யருவருக்காமல் ஈசுவரனைத்தொழுது அவர்களுக்கு
நல்லறிவு வரவேண்டுமென்று பிரார்த்திக்கின்றவர்களும், அவர்கள்
அளவற்ற நோய்களுடன் வீட்டுக்குத் திரும்பிவரினும் மனமுவந்து
அவர்களுக்குக் கைங்கர்யம் முதலியவைசெய்து அவர்கள் எப்பழுது
மில்லாதவர்கள் போல அவர்களுடன் சந்தோஷமாய் வாழ்கின்ற
வர்களுமான புண்ணியவதிகளை நாம் பார்க்கவில்லையா? ஆங்காங்கு
நெறிவழுவிநிற்கும் மங்கையர்கள் தங்களாலேயே கேடுற்றவர்க
ளல்லர். நாகரீகத்திற்சிறப்புற்றோம் என்னும் புல்லறிவினால் அவர்க
ளைப்பலவிடங்களுக்குக் கூட்டிப்போய் அவர்களிடம் இயற்கையாயு
ள்ள நாணம், அச்சம், மானம் முதலிய உயர்ந்த பண்புகளையெல்
லாம் களைந்துவிட்டு, அந்நிய புருஷர்கள் நீசர்களாயிருந்தாலும்
அவர்களுடன் கைகுலுக்கிச் சிரித்து வாயாடும் தைரியத்தையும்
அவர்களுககுப் புகட்டி குலமக்களின் வரம்பினின்று அவர்களுக்கு
அவர்கள் கணவர்களே மிக்க ஊக்கத்துடன் பயிற்சி செய்து பழக்கி
விடுவார்களானால், பின்னர் அம்மடந்தையர்கள் கணவர்களுக்கு மடங்
காத பேய்களாக ஆவார்கள் என்பதற்கையமென்ன? இவ்வித அல
ங்கோலத்தை நாம் எத்தனை இடங்களிற் பார்க்கின்றோம்! இக்காலத்

தில் கல்வியில் நிபுணராய்விட்ட புத்திமான்களுக்கு தங்கள் தலைமயிரை வெட்டிக்கொண்டு தொப்பியைப் புனைந்துகொள்வதும், தம் நாட்டினருக்கு வழக்கமான உடையை யகற்றிவிட்டு சட்டைக்காரனைப்போல் உடையைத்தரிப்பதும், சுத்தஜலத்தைப் பானம் செய்கிறதில்லை யென்கிற விரதத்துடன் அதற்குப் பதிலாக ஸோடா, விஸ்கி, முதலிய பரிசுத்தமான தீர்த்தங்களை சிசாவோடே அருந்துவதும் போதாவாம். தம்முடைய தர்மபத்தினிகளும் தம்மைப்போலவே அலங்கோலப்பட்டு தம்முடன் மேட்டிக்குக்கும் கைசேர்த்துக் கொண்டுவந்து அங்கே நாணத்தைவிட்டு உபந்நியாசம்செய்ய, "இன்னாருடைய மனைவிகல்வியிற்றேர்ந்து மிக்கநாகரீகத்துடன் மேன்மை பெற்றிருக்கின்றாள்; அவனே பாக்கியவான்" என்று நாலு வீணர்களாலும் இக்காலத்திய சில பத்திரிகைகளின் வாயிலாலும் புகழ்ப் பெறுவது தான் அவருடலெடுத்ததற்கே பெரும்பயனென்று கொண்டாடி கௌரவமடைவதை நாம் பார்க்கவில்லையா?

"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்"

என்னும் நீதிமுறையும் அவர்களுக்குப் பயனற்று வீண்வசனமாய் முடிந்துவிட்டதே! அதுபோகட்டும். இப்பொழுது நாம் நடக்கவேண்டிய முறையைப்பற்றி நன்றாய் யோசிக்கவேண்டும்". என்று சொன்னார். அதற்கு,

கிருஷ்ணையர்:—"ஆமாம். இனிப் பின்னடையாமல் அவர்கள் போகுமிடமெல்லாஞ் சென்று எவ்விதத்திலாவது செட்டியாரை யவர்கள் கையினின்றும் மீட்கவேண்டும். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. தங்களுடைய மனத்தில் எப்படி நடத்துவது யுக்தமென்று காணப்படுகின்றதோ அதை யுரைக்கவேண்டும்". என்றார்.

கோவிந்தையர்:—(ஐந்து நிமிஷம் யோசனையுடன் மௌனமாயிருந்து, பின்னர்,) "ஐயா! தாங்கள் அந்த அம்மாளுடன் இவ்விடத்திலேயே இருக்கவேண்டும். அவர்கள் ......புரத்துக்குத்தான் போயிருக்கின்றார்களென்று நினைக்கிறேன். தாமதிக்காமல் இன்றிரவே நான் புறப்பட்டு அவ்விடத்திற்குச் செல்லுகின்றேன். இந்காரியத்தை முடித்து வரும்வரையில் எந்த அலுவலுக்கும் என்னை யழைக்காதிருக்கும்படி என் முதலாளிக்குத் திண்ணமாகவெழுதிவிடுகிறேன். நான் அவ்விடமிருந்தாவது வேறு எங்கிருந்தாவது தங்களுக்குத் தந்திமூலமாக அறிவித்ததின்பேரில் தாங்கள் அந்த அம்மாளுடன் நான் குறிப்பிடுமிடத்திற்கு வந்து சேரவேண்டியது. இதுதான் என்னுடைய தீர்மானம்". என்றார்.

அதற்குக் கிருஷ்ணையரும் இணங்கியபடியால் அவ்விதமே புரிவதாகச் சொல்லிக் கிருஷ்ணையரிடம் விடைபெற்றுக் கொண்டு

கோவிந்தையர் தன்னகத்துக்குச் சென்றனர். அன்றிரவு அவர் பிரயாணமாகி மறுநாட்காலை 9 மணிக்கு......புரம்வந்து சேர்ந்தார். அவ்வூர் ஸ்டேஷனில் விசாரித்ததில் மூன்று அச்சிமங்கையர்களும் நோயாளியாயுள்ள ஒருகனவானும் பின்னுஞ்சிலர்களும் அங்கு வந்திறங்கிப்பிறகு சத்திரத்திற்குப் போனதாக வெளியாயிற்று.

சத்திரத்தில் அவர்களைத் திண்ணமாகக் காணலாமென்கிற ஆவலுடன் கோவிந்தையர் அவ்விடம் சென்று பார்த்ததில் அவர்கள் அங்கில்லை. இனி என்ன செய்யத்தக்கது என்று மிக்க கவலையுடன் அவர் சிந்தனைசெய்து கொண்டிருக்கையில் இளமைப்பருவமுள்ள மங்கையொருத்தி அச்சத்திரத்தின் பக்கத்தில் ஓடும் நதிக்கரையில் ஒரு மரத்தருகில் உட்கார்ந்துகொண்டு தலைவிரிகோலமாய் அழுது கொண்டிருந்தனள். அம்மாதுக்குவயது இருபது இருக்கும். அவளுடைய தோற்றத்தினால் அவள் ஒரு பிராமணகுலத்தில் உதித்தவள் என்று வெளியாயிற்று. கோவிந்தையர் அவள் அருகிற்சென்று உற்றுப் பார்க்கும்போது அவள்புலம்பி மொழிந்து கொண்டிருந்த வசனங்களாவன:—

“ஐயோ! இனி என்னசெய்யலாம்? உயிரை விட்டு விடலாமென்கிற சங்கற்பத்துடன் இவ்விடம் வந்தேன். துன்மரணத்தினால் ஆன்மாவுக்கு அளவில்லாச் சங்கடங்கள் உண்டாகுமெனப் பெரியோர்கள் மொழிவதை நினைக்க என் மனம் பதறுகின்றதே. கணவனைவிட்டால் மங்கையர்க்கு யோக்கியதை கிடையாதென்பது சாஸ்திர வசனம். அதுமட்டும் அன்று. சாதாரணமாய் அநுபவத்தினால் ஆராயினும் கணவனில்லாப் பேதைக்கு எப்பயனும் கைகூடாதென்று நன்குவிளங்குகின்றது. அவருடன் நானும் என்மதத்தையிழந்து அவருக்குப் பணிவிடைசெய்து கொண்டு அவரிடமிருந்து காலத்தைக் கழிக்கலாமென்றாலும் அதற்கும் அவர் இணங்கவில்லையே. நம்முடைய புராதனமானமதக் கொள்கை அவருக்குக் கசப்பாகிய வண்ணம் என்னிடத்திலும் ஆருக் கசப்பு அவருக் குண்டாகிவிட்டது”. என்று மொழிந்துகொண்டு கண்களில் நீர்பெருகப் பரிதபித்துக் கொண்டிருந்தனள்.

உடனே கோவிந்தையர் அம்மங்கையை நோக்கி “அம்மா! நீர் யார்? உமது நிலைமையைப் பார்க்கவும் உமது மொழிகளைக் கேட்கவும் மிக்க பரிதாபமுண்டாகிறது. உம்முடைய வரலாற்றை நான் அறிவதால் தோஷமில்லையென்று உமக்குப் படுமாயின் அதை என்னிடம் சொல்வதில் ஆக்ஷேபம் ஏதும் இராதென்று எண்ணுகிறேன். அற்ப உதவியாவது உமக்குச் செய்யக்கூடுமாயின் செய்யலாமே என்ற எண்ணத்துடன் தான் இவ்வாறு கேட்டேன். என்று இரங்கிச் சொன்னார்,

(இன்னும் வரும்)

P. S. சுப்பிரமணிய ஐயர்.

முத்ரா ராக்ஷஸம்.

(24-ம் பக்கத்தொடர்ச்சி).

சாணக்யன்:—"அப்படியா? ஆனால், செட்டியாரே, ஜனங்கள் சந்தோஷமடையும் விஷயத்தில், அவர்களிடத்தினின்றும், ஏதாவது ப்ரதி ப்ரயோஜனத்தை, அரசர்கள் எதிர்பார்ப்பது ந்யாயந்தானே?"

சந்தனதாஸன்:—"அடியேனிடமிருந்து, ஏதாவது எதிர்பார்க்கப்படுகின்றதோ? எவ்வளவோ? தேவரீர் ஆக்ஞாபிக்கவேண்டும்"

சாணக்யன்:—"ஓ! செட்டியாரே! இது சந்திரகுப்த மஹாராஜாவின் ராஜ்யம். நந்தனுடைய ராஜ்யமன்று. பொருளில் பேராசை கொண்டிருந்த நந்தனுக்கு, பொருள் கிடைக்கக்கூடிய மார்க்கம் ஒன்றுதான் திருப்தியையுண்டுபண்ணக் கூடியதாயிருந்தது. ஆனால் சந்திரகுப்த மஹாராஜனுக்கோ, நீங்கள் (ப்ரஜைகள்) எல்லோரும் திருப்தியாயிருப்பதே.பெரிய சந்தோஷம்."

சந்தனதாஸன்:—"(ஸந்தோஷத்துடன்) ஆர்ய! எல்லாம் தேவரீர் அனுக்ரகந்தான்."

சாணக்யன்:—"ஓ! செட்டியாரே! அப்படி, ஜனங்களின் த்ருப்தி எவ்வாறு வெளியிடத்தக்கது என்று நீர் என்னைக் கேட்டிருக்கவேண்டுமல்லவா?"

சந்தனதாஸன்:—"தேவரீர் தெரிவிக்கவேண்டும்."

சாணக்யன்:—"சுருக்கமாய்ச் சொல்லுகின்றேன். அரசனுக்கு விரோதமான விஷயங்களில் தலையிடாமல் (ப்ரஜைகளெல்லோரும்) இருக்க வேண்டியது தான்!"

சந்தனதாஸன்:—"ஆர்ய! அப்படியானால், அரசனுக்கு விரோதமாக நடப்பதாகத் தேவரீர் திருவுள்ளத்தில் தோன்றும்படி அவ்வளவு துர்ப்பாக்கியம் செய்தவன் எவனோ?"

சாணக்யன்:—"முதலாவது தாங்கள் தான்."

சந்தனதாஸன்:— (காதுகளைப் பொத்திக்கொண்டு)"ஹா! ஹா! ஹா! அப்படி உத்திரவாகலாகாது. நெருப்புடன் புல் எவ்வாறு பகையைப் பாராட்டத்தக்கது?"

சாணக்யன்:—"இது தான் விரோதம்— எப்படி யென்றால், அரசனுக்குக் கெடுதி செய்து வரும் ராக்ஷஸனுடைய மனைவி மக்களை உன் வீட்டுக்கு அழைத்து வந்ததுமன்றி, இன்னும் அவர்களைக் காப்பாற்றியும் வருகின்றாய்."

சந்தனதாஸன் :—"ஆர்ய! ஈதெல்லாம் பொய். தெரியாதவன் எவனோ தேவரீரிடம் இவ்வாறு தெரிவித்திருக்கின்றான்."

சாணக்யன் :— "செட்டியாரே! சும்மா—பயப்படாதேயும் முந்தின அரசர்களின் ராஜபுருஷர்கள், பயத்தால், தங்கள் மனைவி மக்களை, மற்ற நகரத்தார்களின் வீடுகளில் அவர்களுக்கு இஷ்டமில்லாவிடினும், விட்டுவிட்டுத் தேசாந்தரம் போவது, வழக்கந்தான். ஆனால், அவ்விஷயத்தை மறைப்பது மாத்திரந்தான் குற்றமாகும்."

சந்தனதாஸன்:—"வாஸ்தவந்தான். ராக்ஷஸனுடைய குடும்ப ஜனங்கள் எனதுவீட்டில் அந்தக்காலத்தில் இருந்ததுஉண்மைதான்"

சாணக்யன்:—"பொய், என்று முதலில் சொன்னாய். இப்பொழுது "இருந்தார்கள்" என்கிறாய். ஆகையால் உன் வார்த்தைகளே பரஸ்பரம் விரோதமாயிருக்கின்றன."

சந்தனதாஸன்:—"ஆமாமாம்! அந்தமட்டில் நான் வாய் தவறித்தான் சொல்லிவிட்டேன்."

சாணக்யன்:—"செட்டியாரே! சந்ரகுப்த மஹாராஜனுடைய ராஜ்யத்தில், அயோக்யதை மாத்திரம் க்ஷமிக்கப்படமாட்டாது. ஞாபகமிருக்கட்டும்! ராக்ஷஸனுடைய குடும்பஜனங்களை ஒப்புவித்துவிடும்; யோக்யமாய் இரும்!"

சந்தனதாஸன்:—"ஆர்ய! எனதுவீட்டில் மந்திரி ராக்ஷஸனுடைய குடும்பஜனங்கள்(முன்) இருந்தார்கள் என்று தெரிவிக்கவில்லையா?"

சாணக்யன்:— "அப்படியானால் இப்பொழுது அவர்கள் எங்கே போனார்கள்?

சந்தனதாஸன் :—"அடியேன் அறியேனே"

சாணக்யன் :—(சிரித்துக்கொண்டு) "ஆஹா! நீர் அறியிரோ? செட்டியாரே! உம்முடைய தலைக்கு வந்துவிட்டது அபாயம்! அதற்கு பரிஹாரம் கொஞ்சங்கூட சமீபத்திலில்லை. தவிரவும் நந்தனை விஷ்ணுகுப்தன் தொலைத்ததுபோல் (லஜ்ஜைப்படுவதாய்ப் பாவனை செய்கிறான்). சந்த்ரகுப்த மஹாராஜனை ராக்ஷஸன் அசைத்து விடுவான் என்று கொஞ்சமேனும் நினைக்கவேண்டாம். ஏனென்றால்—

(22) எவ்வளவோ பராக்கிரம முள்ளவர்களும், ராஜதந்திரங்களில் நிபுணர்களுமான வக்ரநாஸன் முதலான மந்திரி ச்ரேஷ்டர்களாலேயே நந்தன் ஆண்டுவந்த அக்காலத்தில் எந்த ராஜபதவியானது நிலைநாட்டப்படாமல், அடிககடி சஞ்சலித்துக் கொண்டிருந்ததோ அஃது இபபொழுது ஏகசக்ராதிபத்யமாய் உலகம் முழுமையும் ஸந்தோஷப்படுத்திக்கொண்டு ப்ரகாசிக்கையில், அந்த ராஜபதவியை, சந்திரகுப்த மஹாராஜனிடமிருந்து பிரிக்க முயல்வது, சந்திரனிடமிருந்து ஒளியைப்பிரிக்க முயல்வது போலாகும். அப்படி முயற்சி செய்பவன் யாவன்? மேலும் யானையின் இரத்தத்தைக்குடித்துச் சிவந்த" (முன் 8-வது சுலோகத்தில் சொல்லியவாறு மறுபடிசொல்லுகின்றான்).

சந்தனதாஸன் :—(தனக்குள்) "ஆமாம்! வாஸ்தவந்தான் அவன் பிதற்றுகிறபடியெல்லாம் நடத்தியும் விடுகின்றானே!

(நேபத்தியத்தில் ஓர் பேரிரைச்சல்)

சாணக்யன்:—"சார்ங்கரவ! இஃதென்னவென்று அறிந்துவா!"

சிஷ்யன்:-அப்படியே (வெளியே சென்று மறுபடிப்ரவேசிக்கிறான்)

குருச்ரேஷ்ட! சந்த்ரகுப்த மஹாராஜனுடைய ஆக்ஞைப்ரகாரம், ராஜத்ரோகியான ஜீவஸித்தி யென்னும் க்ஷபணனை அவமானப்படுத்திப் பட்டணத்தினின்றும் துரத்துகிறார்கள்."

சாணக்யன் :— "க்ஷமணா! அஹஹ! சரி! ராஜத்ரோகத்தின் பலனை அனுபவிக்கின்றாய்! செட்டியார் சந்தனதாஸரே! ராஜத்ரோகிகளுக்கு இந்தமாதிரி தான் அரசன் கடுந்தண்டனை விதித்து வருகின்றார். ஆகையால் ஏதோ நண்பன் சொல்லும் வார்த்தைப்ரகாரம் சரியானபடி நடந்துகொள்ளும்! ராக்ஷஸனுடைய குடும்பஜனங்களைஒப்பிவித்துவிடும். அரசனுடைய பலவாறான அனுக்கிரஹங்களைப் பெற்று நெடுங்காலம் அனுபவிக்க வழிதேடிக்கொள்ளும்"

(இன்னும் வரும்.)

R. வேங்கடநாராயண சர்மா B.A. B.L.

மாலினீ மாதவம்.

பதினுன்காவது அத்யாயம்.

விசாரணை.

(The Trial.)

(16-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வத்தியாயத்திற் கூறப்போகும் விருத்தாந்தங்கள் நடந்த தினத்துக்கு இரண்டு தினங்களுக்கு முன் 'ஹிந்து'ப் பத்திரிகையில் பின்வரும் ப்ரசுரம் வெளியாயிற்று.

மணிபுரம் கொலை.

" இக்கொடுங்கொலையின் விருத்தாந்தங்களைப் பற்றி அப்போதைக்கப்போது நமது நண்பர்களுக்கு விவரமாய்த் தெரிவித்துவந்திருக்கின்றோமல்லவா? இப்பொழுது, ஷை கேஸ் மணிபுரம் இரண்டாவது மேஜிஸ்ட்ரேட்டாரால் ப்ரதமவிசாரணை செய்யப்பட்டு, 'கமிட்' ஆய், மதுரை ஸெஷன்ஸ்கோர்ட்டில் அடுத்த திங்கட்கிழமை விசாரணைக்கு வருகின்றது. " மதுரை ஜில்லா முழுமையும் எங்கே போனலும் இக்கொடுங் கொலையைப்பற்றிய ப்ரஸ்தாபம் தான் " என்று நமது சொந்த நிருபர் எழுதுகின்றார். பின் விசாரணை விருத்தாந்தங்கள் வர வர இப்பத்திரிகை மூலமாய் ப்ரசுரம் செய்யப்படும்."

குறித்த தினத்தில் விசாரணைக்கு ஒரு மணி நேரம் முன்னமேயே மதுரை ஸெஷன்ஸ் கோர்ட்டில் இக்கொடுங்கொலை விசாரணை வேடிக்கை பார்க்க ஜனங்கள் திரள் திரளாய்க் கூடிவிட்டார்கள். " சத்தம்! சத்தம்!! " என்று 'டலாயத்' அடிக்கடி எச்சரித்துக் கொண்டு முன்னும் பின்னும் ஓடுவதும் கூட்டத்தை விலக்கி ஓர் வரிசையாய் அமர்த்துவதுமாய் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கின்ருன்.

' எதுடா தூ! இந்தக் கும்பல்லே! இன்டைக்கு என்னமா தொரை கேசு நடத்தப்போகு தாங்கோ! ஏ, ஐயா! ஒங்களுக்கெல்லாம் இங்கே என்னு! சுண்டல் கிண்டல் கொடுக்கப்போகுறாங்களா?

என்ன வேடிக்கை இது ஒங்களுக்கு? நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குப் பிராணவத்தை! என்?" என்று சொல்லிக்கொண்டு தன் பேச்சுத்திறமையைப் பற்றித் தானே மகிழ்வதுமல்லாமல் கூடிய வர்களில் ஆமோதிப்பவர்கள் முகங்களையும் பார்த்துப் புன்சிரிப்புடன் 'டலாயத்' உலாவிவருகின்முன்.

ஸர்க்கார் வக்கீலும், எதிரிதரப்பு பாரிஸ்டர் கோமனும், உதவி வக்கீல்களும் ஆஜராய் அவரவர்கள் ஆஸனங்களி லமர்ந்தார்கள். போலீஸ். இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஹரிராவ், தன் உயர்ந்த போலீஸ் உடையுடன் ஸர்க்கார் வக்கீல் பக்கம் ஓர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, தன் இடச்கையால் தன் கருமீசையைக் கதிர்போல் முறுக்கி வளைத்து விட்டுக்கொண்டு, 'ஸர்க்கார்' வக்கீலுக்கு ஏதேதோ 'இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' கொடுத்துக் கொண்டிருக்கின்முர்.

ஸர்க்கார் வக்கீல் திடீரென்று திரும்பிக் கோமன் துரையை ஸலாம் செய்து "மிஸ்டர் கோமன்! மத்ராவில் இருந்து நேற்றே வந்துவிட்டீர்களோ, என்று உபசாரமாய் வினவினர்.

கோமன்:—"அலோ! மிஸ்டர் பப்ளிக் ராஸ்க்யூட்டர்! தாங்க் யூ ஆமாம்! என்னமாய் இருக்கிறது?கேஸின் தன்மை;ஹ ஹ ஹா!"

ஸர்க்கார் வக்கீல்:—என்னைப் பார்க்கிலும் தாங்கள் அதன் விவரம் நன்முய் அறிந்திருக்கவேண்டும். கீழ்க்கோர்ட்டில் நடத்தியிருக்கின்றீர்கள்! ஹ ஹ ஹா ஹ ஹ ஹா!"

கோமன்:—"ஆமாம் ஆமாம்! அதுவும் வாஸ்தவம் தான்—ஆனுல்"

இதற்குள் டாங்! டாங்! டாங்......... 11 மணி அடித்தது. விலஹ்! விலஹ்!! விலஹ்!! என்று டலாயத் கூட்டத்தை விலக்குகின்முன். டக்! டக்! டக்! என்று பூட்ஸ் சத்தமிட்டுக் கொண்டு, கழுத்து முதல் கால்வரை 'கௌன்' (4 கைச்சட்டை)தரித்து,ஸெஷன்ஸ் ஜட்ஜ் ப்ரவேசமானுர். உடனே வக்கீல்களும், மற்றவர்களும் எழுந்து நின்முர்கள். ஜட்ஜ் வக்கீல்களை நோக்கி உபசாரமாய் ஸலாம் செய்து தன் ஆஸனத்தில் அமர்ந்தார். அவர்களும் ப்ரதி ஸலாமிட்டு மறுபடி உட்கார்ந்தார்கள்.

இதற்குள் ஸூப்ரிண்டெண்டெண்டு 'எல்லிஸ்' துரையும் பாதாதிகேச பரியந்தம் போலீஸ் உடைதரித்தவராய் தாளக்ரமம் தவறுது நடையுடன் ப்ரவேசமாய் ஜட்ஜ் அண்டை வந்து ஒரே விறைப்பாய் நின்று ராணுவஸலாமிட, ஜட்ஜும் ப்ரதி ஸ்லாமிட்ட பிறகு அவரருகில் போடப்பட்ட ஓர் ஆஸனத்தின் கண் அமர்ந்தார் சிறிது நேரம் எல்லாம் நிஸ் சப்தமாயிருந்தது. பிறகு,

ஜட்ஜ்:—"சரீ! இன்றைக்குக் கேஸை ஆரம்பிப்போம்" என்றூர். உடனே குமஸ்தா இன்ஸ்பெக்டர் ஹரிராவை நோக்க, இன்ஸ்பெக்டர்போலீஸார்களைப்பார்க்க, இரண்டுபேர்கள் ஓடினூர்கள். சிறிது நேரத்தில் மாதவன் ஜட்ஜ்முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். காட்டில் ஸ்வேச்சையாய்த்திரியும் சிங்கக்குட்டியானது கூட்டில் அடைபட்டு, தன் வீரமும்பலமும் அடங்கி யொடுங்கியிருப்பது போல மாதவன் தனக்குநோந்த ஆபத்தால்மயங்கிநின்றுன். ஆங்குள்ளோர் யாவரும் அவன் முகத்தை நோக்கினூர்கள்.!! ஆஹா! தர்மமே உருவெடுத்தாற் போல் விளங்கும் இவன் இக்கொடுங்கொலையை எவ்வாறு செய்திருப்பான்? என்று சிலர் சந்தேகித்தார்கள்.

"ஆ! சிரித்துச் சிரித்துக் குடியைக் கெடுக்கும் சண்டாளர் எத்தனைகோடி! இவனும் ஒருவனுய் இருக்கக்கூடாதா" என்றூர்கள் சிலர். "அகத்தினழகை முகத்தால் எவ்வாறு அறிய முடியும்" என்றூர்கள் வேறு சிலர். "காமமும் துரோகமும் காவலுக் கடங்கா!" என்பது சரியாய்விட்டதே! அடடா! கேவலம் காம வெறியால், கொலைசெய்யத் துணிவதுண்டோ? என்ன அந்யாயம் இந்த லோகத்தில்? 'இது தான் ஸம்பாவிதம்' 'இது அஸம்பாவிதம்' என்று சொல்ல இடமில்லை. ஸார்" என்று சொல்லிக்கொண்டார்கள் வேறு சிலர். "ஆ! நமக்கென்ன தெரியும்? எல்லாம ஈசனுக்குத் தான் வெளிச்சம்! காணுததைக் கூருதே! கேளாததைச் சொல்லாதே" என்று சொல்லிக்கொண்டார் பின்னும் சிலர். நிற்க.

"மாதவ! நீ மணிபுரம் வஸந்த விலாஸம் பங்களாவுக்கடுத்த சோலையில் வேலாமரத்தடியில் அல்லது அதற்குச் சமீபத்தில் ………… தேதி பகல் சுமார் 8மணி நேரத்தில், மரண முண்டாக்க வேண்டுமென்று, அல்லது உண்டாகுமென்று தெரிந்துகொண்டு,

தினகரனைக் கொன்றுவிட்டதாகவும், அதனால், கொலைக் குற்றமாகும்படியான நரஹத்தி செய்திருப்பதாயும் உன்மேல் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது. நீ குற்றம் செய்தாயா இல்லையா?"

மாதவன்:—(மௌனம்!)

உடனே அஸெஸர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஸர்க்கார் வக்கீல் ப்ரக்ருத விசாரணையின் தன்மையையும், சட்ட அம்சங்களையும், தான் விசாரிக்கப்போகும் ஸாக்ஷ்யங்களையும், அவைகளின் பலாபலன்களையும் பற்றி ஸம்க்ஷேபமாய் எடுத்துரைத்தார்.

முதலாவது ஸாக்ஷியாகிய மாலினீ செய்கை தினம் மாலையில் நடந்த விருத்தாந்தங்களைத் தெளிவாய்க் கூறினாள்.

ஸர்க்கார் வக்கீல்:—"ஏனம்மா! தங்களை மணிபுரம் ஜமீன்தாரவர்களுக்கு விவாஹம் செய்விப்பதாய் நிச்சயமாயிருக்கின்றதல்லவா?"

மாலினீ:—(தலை குனிந்தவண்ணமே கண்ணீர் சொரிந்துகொண்டு) "ஆமாம்!"

ஸர். வக்.:—"ஆனால் தாங்கள் மாதவனை—"

கோமன்:—"நான் ஆக்ஷேபிக்கிறேன், எதற்காக இக்கேள்விகள் நமது நண்பர் கேட்கின்றார் என்று விளங்கவில்லை"

ஸர். வக்.:—"வர வர எல்லாம் விளங்கும் ஹ! ஹ!!"

கோமன்:—"அல்ல! இக்கேள்வி இவ்விசாரணையில் எவ்வாறு ஸம்பந்தமுள்ளதென்பது அறிய எனக்குப் பாத்தியமுண்டு!"

ஜட்ஜ்:—உமது கேள்வியானது இக்கேஸில் எவ்வாறு சம்பந்தமுள்ளது?"

ஸர். வக்.:—"கைதி இக்கொலை செய்வதற்குக் காரணத்தை நிரூபிக்க வேண்டுமல்லவா? இக்கேள்விக்கு ஏற்படும் விடைகள் அதை நிரூபிக்கும்."

ஜட்ஜ்:—"சரி! மேலே!——"

ஸர். வக். :—"அம்மா! சொல்லுங்களம்மா!"

மாலினீ:—"ஆம் மாதவனைத் தான் காதலித்திருக்கின்றேன். (விம்மி யழுகின்றாள்).

ஸர். வக். :—"அவனிடத்துள்ள அன்பு இன்னும் மாறவில்லை யென்று எண்ணுகின்றேன்?"

மாலினீ.—"என்றும் மாறாது!"

ஸர். வக். :—"சரி. அது இருக்கட்டும். இவ்விஷயத்தில் உன் தமபனுக்கு ப்ரியமில்லை——?"

மாலினீ:—"ஆமாம்"

பிறகு பலகேள்விகள் கேட்கப்பட்டன. பாரிஸ்டர் கோமன் குறுக்குவிசாரணை (cross-examination) செய்து பல கேள்விகள் கேட்டபிறகு,

கோமன்:—"அம்ம! செய்கை மாலையில், தாங்களும் கமலாவும், தங்கள் தமயனால் கண்டிக்கப்பட்டு, அனுப்பப்பட்டதாகச் சொன்னீர்களல்லவா?"

மாலினீ:—"ஆமாம்"

கோமன்:—"தாங்கள் பிரியும்பொழுது மாதவனை ஏதாவது பிரார்த்தித்த துண்டா?"

ஸர். வக் :—"ஆக்ஷேபிக்கின்றேன். மாலினீ எமது ஸாக்ஷியே யொழிய எதிரி ஸாக்ஷியல்ல! மேலும் இக்கேள்வி இந்தக் கேசுக்கு அஸம்பந்தமானது."

கோமன்:—"அப்படியல்ல! இதனால் மாதவனுடைய மனநிலை இத்தன்மையா யிருந்ததென்று வெளியாகும். அதனால் அவன் இக்கொலை செய்திருப்பானு, மாட்டானு என்பதை சுலபமாய் ஊகித்துவிடலாம்."

ஜட்ஜ்:—எங்கே! ஸாக்ஷியின் விடையை முதலில் கேட்போம். எழுதிக்கொள்ள வேண்டுமா என்பதைப்பற்றிப் பின்னுல் யோசிப்போம்."

கோமன்:— "சொல்லுங்களம்மா! தைரியமாய்!"

மாலினீ:— "மாதவ! என் தமயன் என்ன சொன்ன போதி லும், நாம் மூவரும் இது வரை வாழ்ந்து வந்த நேசத்தைப் பாரா ட்டி, நீ ஒன்றும் செய்யாது மன்னிக்க வேண்டுமென்றேன்"

கோமன்:— "அதற்கு அவன் என்ன பதிலுரைத்தான் ?"

மாலினீ:— "எனக்குக் கொடும் பகைவனுயினும் உனக்கு அபி மானம் கொஞ்சமேனும் இருப்பின் அவனுக்கு நான்கெடுதி செய்யத் துணியேன், என்றான்"

ஸர் வக்:—"ஓ! இது கொஞ்சமேனும் கேஸுக்குச் சம்பந்த மில்லை"

கோமன்:—"ஏன் ? மாதவன் மனநிலைமையைத் தெரிவிக்கின் றது. செய்கை சமயத்தில் நடந்தது, சொன்னது எல்லாம் ஸாக்ஷ்ய மாகும்."

ஸர். வக்:—"எனது நண்பர் சொல்லுகிறபடியே வைத்துக் கொண்டாலும்,மாலினீயும் கமலாவும் பிரிந்த பிறகு மறுபடி சண்டை யுண்டாயிருக்கலாகாதா ?"

கோமன்:—"அதைப்பற்றிப் பின்னால் தர்க்கித்துக் கொள்ளு வோம்"

ஸர். வக்:—"இதை எழுதிக்கொள்ளக்கூடாதென்று ஆக்ஷேபிக் கின்றேன்"

ஜட்ஜ்:— (கொஞ்சம் கோபத்தை யடக்கிக்கொண்டு சாந்த மாய்) "மிஸ்டர் பப்ளிக்ப்ராஸிக்யூடர்! க்ரிமினல் வ்யவஹாரங்களில பிடிபட்ட கைதிகளை எப்படியாவது தண்டித்துவிட வேண்டுமென பது க்ரிமினல் தர்மமல்ல. ஸர்க்கார் முறை (Policy)யு மல்ல. கைதி குற்றம் செய்தவன் தான் என்று நிச்சயமாய் ருஜுவாகும் விஷயங்களில், அவ்வாறு ருஜுவாகாமல் தப்பாது காக்கும்பொரு ட்டு மாத்திரம் ஸர்க்கார் வக்கீல்கள் நியமிக்கப்படுகிறார்கள். எள் ளளவேனும் சந்தேகம் ஏற்படுமாயின் கைதியை விட்டுவிடவேண் டிடதே க்ரிமினல் தர்மமல்லவா ? இதை உத்தேசித்துத் தானே

கொலைக்குற்றங்களில், கைதிக்குக்கூட ஸர்க்கார் செலவில் வக்கீல்கள் நியமிக்கப்படுகின்றார்கள்? அதனால், நியாயமானது அணுவளவேனும் தவறாது நடக்கவேண்டுமென்பது தான் ஸர்க்கார் அபிப்பிராயம். எப்படியாவது தாங்கள் கொண்டுவந்த கேஸ் ஜயிக்கவேண்டுமென்பதல்ல. மேலும் குற்றமுள்ள நூறுபேர்கள் விடுபட்டாலும் பாதகமில்லை. குற்றமற்ற ஒருவன்கூட தண்டனைக்குட் படலாகாது.''

ஸர். வக்:—"கோர்ட்டார் அபிப்ராயம்.!"

ஸாக்ஷ்யம் எழுதிக்கொள்ளப்பட்டது. பிறகு இரண்டாவது ஸாக்ஷி கமலா என்பவளால் மாலினியின் ஸாக்ஷியம் பெரும்பாலும் ஆதரிக்கப்பட்டது. பிறகு துவாரபாலகர்கள் இருவரும் முறையே விசாரிக்கப்பட்டார்கள். அவர்கள் எதிர் விசாரணையில்,

கோமன்:— "சரி! மாதவன் இரத்தக்கோலத்துடன் அரண்மனையில் புகுந்ததாகச் சொன்னாயல்லவா?"

சாக்ஷி:—"ஆமாம்!"

கோமன்:—அப்பொழுது அவன் உங்களை ஏதாவது கேட்டானா?"

சாக்ஷி:—"ஏ! ஜவான்களே! சின்னராசா உள்ளேவந்தாங்களா? என்று கேட்டார்.

கோமன்:—"சரி!"

அநேக ஆக்ஷேபனை ஸமாதானங்களின் பேரில் இந்த விடைகளும் எழுதிக்கொள்ளப்பட்டன. பிறகு தோட்டக்காரர்கள், தாங்கள் கண்டெடுத்த, ஒடிந்த கத்திப்பிடியைப் பற்றியும், தலைப் பாகையைப்பற்றியும் விசாரிக்கப்பட்டார்கள். மேற்சொன்ன கத்திப்பிடியும் ஒடிந்த துண்டும், மாதவனதுதானென்றும் தலைப்பாகை தினகரனதுதானென்றும் அங்கீகரிக்கப்பட்டன.

(இன்னும் வரும்)

R. S. நாராயணஸ்வாமி ஐயர், **B. A., B. L.**

திருக்குறள் மாட்சி.

பெறுதற்கரியமாநுடப் பிறவியெய்திய ஆன்மாக்களடைய வேண்டியதும் அடையக் கூடியதுமான பயன் அறம், பொருள், இன்பம், வீடு என நான்காம். இதுபற்றியே இந்நான்கினையும் புருடார்த்தமெனக் கூறுப. ஆன்மாக்கள் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையராதலின் இயற்கையால் இந்நான்கினையும் பெறுதற்கியலாமை கருதி, செயற்கையால் பெறும் வண்ணம் வேதாகமங்களை இறைவன் அருளிச்செய்தனன். அவையும் பரந்து விரிந்து கிடப்பதால், அவற்றையாராய்ந்தறிய இயலாதவர்களுமுய்ய வெண்ணி, அவ்வேதாகமப் பொருள்களின் சாரங்களைத் திரட்டிச் சில பெரியோர் நூல்களாக்கித் தந்தனர். அந்நூல்களும் அறம் ஒன்றே கூறுவனவும், பொருளொன்றே கூறுவனவும், இன்பம் ஒன்றே கூறுவனவும், வீடு ஒன்றே கூறுவனவும் இவற்றுள் இரண்டு அல்லது மூன்று பயன் கூறுகின்றனவுமாக இருந்தமையான் நான்கு பயனும் சுருங்கிய ஒரு நூல்வழியாக எல்லா ஆன்மாக்களும் பெறவெண்ணி அமிழ்தினுமினிய தமிழ் மொழியில் முதற்பாவென்னுங் குறட்பாவால், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் ஒரு நூலருளிச் செய்தனர். இதனை

இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்—மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

என்னும் நரிவெரூஉத்தலையார் சாற்றுக்கவியாலறிக. இங்ஙனம் நான்கு பயனையும் ஒரு சேரத்தொகுத்துதவிய வள்ளற்றன்மையென்னுங் காரணத்தால் இந்நூலாசிரியர் வள்ளுவரெனப் பெயர் பெற்றனர்.

இப்பெயர்ச்சொல்லில் வள், பகுதி. அர், விகுதி. உ, சாரியை. அப்பகுதிக்குப் பொருள் கொடை. இவ்வாறன்றி வள்ளுவர் என்பது ஓர் சாதிப்பெயராகக் கொள்ளக் கூடாதென்பதை

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

என்னும் மாமூலனார் சாற்றுக்கவியாலறிக.

இந்நூற்குப் பாவின்பெயரே பெயராய்த் திருக்குறளென வழங்கிவருகின்றது. இப்பெயரை நோக்குங்கால், இந்நூல் வெளிவருவதற்கு முன்னர், குறட்பாவால் நூலில்லையென்று ஊகிக்க இடந்தருகின்றது. இந்நூலாசிரியர் காலம் கடைச்சங்கக் காலமென்பது சாற்றுக்கவி சொன்ன புலவர்களால் அறியத்தக்கது. அச்சங்கப் புலவருள் சீத்தலைச் சாத்தனாரென்பா ரொருவர். இவர் சங்கத்தில் அரங்கேற்றுவதற்காக வரும் நூல்களிலுண்டாங் குற்றத்தைப் பொறுதவராய் ஆயுதத்தால் சிரசில் குத்திக்குத்தி சீவைக்கப்பெற்ற காரணத்தால் பெயர் பெற்றவர். திருக்குறளென்னு மிந்நூல் அரங்கேற்றுங்கால் ஒரு குற்றமுங்காணாதவராய் பெருமகிழ் வெய்தி இவர் தலைக்குத்து நீங்கினாரென்பதை

சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்கு தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

என அப்புலவரு ளொருவராகிய மருத்துவன்றாமோதரனார் சாற்றுக்கவியாலறியத்தக்கது.

இச்செய்யுளில் இந்நூல் முப்பாலென்று கூறியிருக்கவும் உரையாசிரியர் பரிமேலழகரும் "வீடென்பது சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாதலின் நூல்களாற் கூறுப்படுவன வேனை மூன்றுமேயா"மெனக் கூறியிருக்கவும், நாற்பாலுங்கூறுவதிந்நூலென முன்னர்க் கூறியது முரணாதோ வெனின், முரணாது; என்னை? அறம் தொகையாலொன்றாயினும் இல்லறம், துறவறமென, வகையாலிரண்டாய், அத்துறவறமும், விரதம் ஞானமென விரண்டாய், ஞானம் வீடு பயத்தற்குச் சிறந்ததாய் நிற்றலினென்க. இது பற்றியே பரிமேலழகர், வீடு துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல

லது இக்கணவகையாற் கூறப்படாமையின், என்று கூறினர். இம்மொழியால் துறவறங் கூறப்பட்டது கொண்டே வீடு கூறப் பட்டதென நன்குபுலனும் இக்கருத்தைத் துறவறத்து ஞானவியல் அவாவறுத்தலென்னுமதி காரத்தில்,

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

என்ற பாட்டில், இதனல் வீடாவது இது வென்பதூஉம், அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே உளதாமென்பதூஉங் கூறப்பட் டன, எனக்கூறிய உரையும் வலியுறுத்தும். இங்ஙனம் வலியுறு த்தியதை யுற்றுநோக்காது முன்னர் வீடு கூறமுடியாதென்று கூறி, பின்னர் வீடு இதுவென முன்னொடு பின்முரண்படக் கூறினரெனக் கூறுதல் பொருந்தாது.

இங்ஙனம் நாற்பாலும் இந்நூலிலடங்கியுள்ளன வென்பதை முன்னர்க்கூறிய மாமூலனர் செய்யுளானும்,

அறமுத னன்கு மகவிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனர் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

என்னுங் கோவூர்கிழார் செய்யுளானும் அறிக.

முப்பாலில் நாற்பாலடங்கு மென்பதை

தப்பா முதற்பாவாற் றமாண்ட பாடலினன்
முப்பாலி னற்பான் மொழிந்தவ—ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழுந்
தெய்வத் திருவள் ளுவர்.

என்னுங் கீரந்தையார் செய்யுளாலறிக.

நான்கு பயனுங் கூறிய இத்திருக்குறள் 133 அதிகாரங்களை யுடையது. அவற்றுள் முதனன்கதிகாரம் பாயிரம். அடுத்து முறையே யிருபததிகாரம் இல்லறம். துறவறம் பதின்மூன்றதிகா ரம். ஊழ் ஒரு அதிகாரம். பொருள்எழுப ததிகாரம். இன்பம் இரு பத்தைந்ததிகாரம். இனி இவ்வாறு வகுத்தருளிய முறைமையைப்

4

பற்றி ஆராய்வாம். நூலியற்றுவோர் எடுத்துக்கொண்ட நூல்
இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டு கடவுள் வாழ்த்தும்,
யாவருக்கும் மனவெழுச்சி சேறற்பொருட்டுப் பயன், சம்பந்தம்
அதிகாரி, நுதலிய பொருளாகிய நான்கும் பாயிரமாக முதற்கட்
கூறுவதியல்பாதலின் அவ்வாறே ஆசிரியர் திருவள்ளுவரும் கடவுள்
வாழ்த்து என்னும் முதலதிகாரத்தில், முதற்பாட்டால் கடவுள்
வாழ்த்தும், ஏனை ஒன்பது பாட்டால் பயனும், இரண்டாவது வான்
சிறப்பு என்னும் அதிகாரத்தால் சம்பந்தமும், மூன்றாவது நீத்தார்
என்னு மதிகாரத்தால் அதிகாரியும், நான்காவது அறன்வலியுறுத்த
லென்னு மதிகாரத்தால் நுதலிய பொருளும், பாயிரமாகக் கூறினர்.

பயன்முதலிய நான்கினையும் அநுபந்த சதுட்டயமென்று வட
நூலார் கூறுவர். தமிழ் இலக்கண நூலில் இந்நான்கினையுஞ் சிறப்
புப்பாயிரத்துளடக்கி நூலாசிரியர் சொல்லக் கூடாதென்ற வரை
யறை செய்திருக்கவும், அதற்குமாறாக நூலாசிரியர்தாமே கூறினா
ரென்றல் பொருந்துமோவெனின், பொருந்தும். என்னை? சிவஞா
னசித்தியார் என்னுஞ் சித்தாந்த நூலில் பாயிரத்தில் "பண்டைநற்ற
வத்தாற்றோன்றி" என்னும் செய்யுளாலும் "என்னையிப்பவத்திற்
சேரா" என்னும் செய்யுளாலும், கைவல்ய மென்னும் வேதாந்த
நூலில் "படர்ந்த வேதாந்த" மென்னும் செய்யுளாலும் இந்நான்கினை
யுங் கூறியிருத்தலா லென்க. அந்நூல்களிற் கூறியது தானும் இல
க்கணத்திற்கு முரணாகாதோவெனின், ஆகாது. என்னை? இலக்கண
நூலிற் கூடாதென்றது தன்னைப் புகழ்தல் கூடாதென்றதொன்றே
கருதியல்லது வேறன்று. இந்நான்கும் தன்னைப் புகழ்தற்கியையின்
றாதலாலும், ஆக்கியோன் பெயரே அதற்கியையுடைத் தாதலானு
மென்க. இனி முதற்பாவாற் கூறிய கடவுள்வாழ்த்து, வாழ்த்து,
வணக்கம், பொருளியை புரைத்தலென்னும் மூவகை வாழ்த்துள்
பொருளியைபுரைத்தலாம். கடவுள் வாழ்த்துக் கூறியபின்னர், இந்நா
லாலாம் பயன் கூறுவான்றொடங்கி, இறைவன் திருவடியடைதலும்
பிறவித்துன்பம் நீங்கலும் ஆகிய இரண்டு பயனையும் ஒன்பது
பாட்டால் கூறினார். இவ்வொன்பது பாட்டாலும் பயன் கூறினா
ரென்பதைக் "கற்றதனாலாயபய னென்கொல்வாலறிவ னற்றாள் தொ
ழாஅரெனின்" என்ற இரண்டாவது பாட்டானே யினிதுவிளங்கும்.

இனி, இரண்டாவது வான்சிறப்பு என்னும் அதிகாரத்தா லிந்த நூற்குச் சம்பந்தங்கூறினர். சம்பந்தமாவது நூற்கு மதிகாரிக்கு முரிய சம்பந்தமெனவும், விடயத்திற்கும் நூற்குமுரிய சம்பந்தமெனவும் பலவகைப்படும். அவற்றுள் ஈண்டுக்கூறியசம்பந்தம் விடயத்திற்கும் நூற்குமுரிய சம்பந்தமாம். விடயமாவது இல்லறந் துறவறம் என விரண்டாம், அவ்விரண்டும் மழையின்றி நடவாமையின் அவற்றிற்கு மழைசம்பந்தம் ஆதலினால் நூலுக்குமதுவே சம்பந்தமாயிற்று. இதனை "தானந் தவமிரண்டுந் தங்காவியனுலகம் வானம் வழங்கா தெனின்" என்னும் ஒன்பதாவது பாட்டால் தெளிக.

இனி இந்நூற்கு அதிகாரி கூறுவான் றொடங்கி "நீத்தார்பெருமை" யென்னும் மூன்றாவது அதிகாரம் கூறினர். நீத்தாரென்பது துறவறத்திற் கதிகாரியாகிய முற்றத்துறந்த முனிவரையும், இல்லறத்திற் கதிகாரியாகிய தமக்குரிய பொருளின்பங்களையே யன்றி, பிறபொரு ளின்பங்களைப் பற்றாத கிருகஸ்தரையுங் குறிக்கும். இவ்வதிகாரம் கிருகஸ்தரையுங் குறிக்குமென்பதை, "ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா னிந்திரனே சாலுங் கரி" என்னும் 5வது பாட்டில் அகலிகையோடு கூடியகௌதம ரிஷியை "ஐந்தவித்தா" னாற்றலுக்கு எடுத்துக் காட்டினமையால் இனிது தெளிக, இனி நான்காவது அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தால். இந்நூலிற் கூறப்படும் பொருள் கூறுவான்றொடங்கி அறம் பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் அறத்துளடக்கி அறமே விடயமெனக் கூறினர். பொருள், இன்பம், வீடு அறத்துள் அடங்குமென்பதை, பொருட்பால் கூறுமிடத்து அறமே கூறுதலானும், இன்பத்துப்பால் கூறுமிடத்தும், தருமவழியால் தனக்குரிய மனைவியின்பமே, இன்பமெனக் கூறுதலானும், வீடு "அன்றாலின் கீழிருந்தங் கறஞ்சொன் னானை" என்ற முதுமொழியால் அறமே யாதலினாலும், அறத்துளடக்கிக் கூறினர். அன்றியும் வீடு துறவறமென்னுங் காரணவகையாற் பெறப்படுவதென்று முன்னர்க் கூறியவாற்றானும், அறத்துளடங்கு மென்பது தெளிக.

இவ்வாறு பாயிரஞ் சொல்லிமுடித்து ஆன்மாக்களுக் குரியனவாகிய இந்திரியம், மனம், அறிவு என்னும் மூன்று கருவிகளின்

தொழிற்பாட்டில், முன்னர் நிகழ்வது இந்திரியத் தொழிலாதலின் அதனை நீத்தவர்க்கே மனத்தொழிலால் யோகமுயற்சி செய்யவும், அது முற்றுப் பெற்றவர்க்கே அறிவுத்தொழிலால் ஞானமுயற்சி செய்யவுங் கூடுமாதலின் முன்னர் இந்திரியங்களின் விருத்தி குறைவதற்குரிய இல்லறவியல் கூறினர். இவ்வியல் இருபது அதிகாரங்களையுடையது. இவ்வதிகாரங்களால் விதித்தன செய்தலும், விலக்கியன செய்யாதொழிதலும் ஆகிய இரண்டும் ஒருசேர நியமிக்கப்பட்டுள்ளன.

இனி இல்லறத்தை இனிது நடாத்தி இந்திரியப்பற்றாகிய எனதென்னும் புறப்பற்றுக்கள் நீங்கின ஆன்மா யானென்னும் அகப்பற்று நீங்கவேண்டுவது முறைமையாதலின், இதனடுத்து துறவறவியல் கூறினர். இவ்வியலில் யான் என்னும் சொல்லுக்குப் பொருளாக தேகத்தையே கொண்டிருந்த ஆன்மா, அத்தேகத்தினிடத்துப் பற்றொழிந்த போதுஞானத்திற் பிரவிர்த்திக்கக் கூடுமாதலின், தேகப்பற்றொழிதற்குத் துணையாக விரதமென்றும், உண்மை உணர்வதற்குத் துணையாக ஞானமென்றும் பகுத்து முன்னர் விரதத்தைக் கூறினர். ஒன்பது அதிகாரங்களால் விரதங்கூறி, இவ்வதிகார ஆராய்ச்சியால் தேகப்பற்று நீங்கிய ஆன்மா ஞானத்தை அடையும் முறைமையில் அந்நெறி மனோநாசம், தத்துவஞானம், வாசனாக்ஷயம் என்னும் மூன்று பிரிவுடையதாயிருப்பதை நான்கு அதிகாரங்களால் விளக்கினர். அவற்றுள் நிலையாமை, துறவு என்னும் இரண்டு அதிகாரங்களும் மனோநாசமாம். மனோநாசமென்பது மன, நாசம் என்னும் இருமொழிகள் சேர்ந்த ஒருதொடர்மொழி. மனமாவது அது, இது என்னும சங்கற்ப விகற்பங்களையுடையது. அவற்றை நீத்தலே நாசம். நீத்தற்குபாயம் அது இதுவென்று காணப்படும் நிலையாண்மையை உணர்தலும், உணர்ந்தவாறே அப்பொருள்களைப்பற்று தொழிதலுமே யாதலின் நிலையாமை துறவு, என்னும் இரண்டு அதிகாரங்களும் மனோநாசமாயின. இங்ஙனம் மனோநாசம் சித்திப்பது அறிவுத்தொழிலாகிய தத்துவஞானத்தாலன்றி முடியாமையின் மூன்றாவது மெய்யுணர்தலென்னு மதிகாரத்தை வைத்தனர்.

(இன்னும் வரும்)

பொ. மு. முத்தையபிள்ளை.

அவ்வாறாயின் பிராரத்த மநுபவித்துத் தீர வேண்டுமென்று நூல்கள் கூறவும் அதற்குமாறாக பிராரத்தத்தை உபதேசம் ஒழிக்குமென்றல் எவ்வாறு பொருந்துமெனின்? பிராரத்தமாகிய விடயாநுபவமெல்லாம் உடலைப் பொறுத்ததேயன்றி உயிரைப் பொறுத்ததன்று. ஆயினும் உடல் சடமாதலின் அதனோடுகூடியதனை யானெனக் கருதுமுயிர்க்கே அனுபவ மெனப்படும். உபதேசத்தால் உடம்பைத் தானன்றெனவு முயிராகியதானு மிறைவன் அறிவித்தாலன்றி யறியுமாறில்லை யெனவும், அறிந்து சிவமே தானாய் சிவனுக்குரிய எண்குணங்களும் தன்மாட்டு விளங்கப்பெற்று உடம்பிற்குரிய அநுபவந் தன்னறிவின்கட் பற்றாது நிற்றலின் உபதேசம் பிராரத்தத்தை யொழிக்குமென்றது பொருந்துதற்கிழுக்கின்றா மென்க.

அற்றேல் பிராரத்தத்தை சிவமாய் நிற்றலால் உயிரும் பற்றமாட்டாது. உடம்பும், சடமாகையால் பற்றமாட்டாது. பிராரத்தமும் வந்தே தீருமென்றால் அதனையேன்று கொள்வதெது வெனின்? உயிரோடு அத்துவிதமாய் நிற்குஞ் சிவபெருமானே யேன்று கொள்வனென்க. இக்கருத்துப்பற்றியன்றே,

நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மருனுடைமை—யாமென்னி
லெத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை
முற்செய்வினை யுந்தருவான் மூன்.

என சிவஞான போதத்தினும்,

சிவனுமிவன் செய்தியெல்லா மென்செய்தி யென்றுஞ்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல வுடனாகி நின்றுகொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே.

எனச் சிவஞான சித்தியாரினும் அனுபவமுடைய தேசிகர்கள் அருளிச் செய்வாராயினர்.

அங்ஙனமாயின் பெத்தர்வினையை நுகர்வித்தலு முத்தர் வினையைத் தான் ஏன்று கொள்ளலு மிறைவனுக்கு நடுவு நிலைமையாமோ வெனின் "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்" என்னும் பழமொழி யெடுத்துக்காட்டி வலியுறுத்திய சிவஞான போதச் சுருதியானே நடுவு நிலைமையாதற் கிழுக்கில்லையென்பது இனிது விளங்குமென்க.

இவ்வாறு சிவாநுபவம் வரப்பெற்ற மாணுக்கனுக்கு முதல்வன் சன்
னிதியில் பிராரத்தவினை உடற்கனுபவமாய்க் கழியும்வரை உடம்பு நிற்கு
மாதலின் அவ்வுடம்பால் நுகரப்படும் பிராரத்தவினை காரணமாக உண்டா
மாகாமியவினை யேறுமற் சிவானுபவத்தில் உறைத்து நிற்கவேண்டு மென்
பதை யறிவுறுத்தற்கு அதனேடு இயைபுடைய விபூதியைத் தரித்துக்
கொள்ளும்படிக்கும் அங்ஙனமாயினும் அற்றம் பார்த்து வாசனுமலம் வந்தழி
யதனைத் தவிர்த்தற்கு சிவமாய் நிற்கு முறைமையினை யுணர்த்தும் இயை
புடைய பஞ்சாக்கரத்தைக் செபிக்கும்படிக்கும் அதினு மமைதி பெரு
தாயின் உடல் பொருளாவி மூன்றுங் தத்தஞ்செய்தால் ஆசிரியனுடைப்
பொருளாதலின் அவற்றை நம்மதெனக் கருதல் தானஞ்செய்த பொருளை
கவர்ந்த பாதகமாகுமென எண்ணி அமைதிபெற வேண்டுமென்பதை யறிவு
றுத்தற்கு தீட்சையை யுணர்த்தும் இயைபுடைய உருத்திராக்கத்தை யணி
ந்துகொள்ளும்படிக்கும் ஆசிரியர் அருளிச் செய்வர்.

அன்றியுஞ் சிவாநுபவம் பஞ்சாக்கர உபதேசம் தீட்சையாகிய இம்மூ
ன்று முடையானெனப் பிறரறிந்து வழிபட்டு உய்தற் பொருட்டும்
விபூதி உருத்திராக்கங்களை யணிந்துகொள்ளும்படிக்கும் பஞ்சாக்கரத்தைச்
செபிக்கும்படிக்குஞ் செய்தாரென்றலு மொன்று. அற்றேல் விபூதி பஞ்சா
க்கரம் உருத்திராக்கம் ஆகிய இம்மூன்றும் முறையே சிவானுபவம் நிற்கு
முறை தீட்சையென்று மூன்றனேடும் இயைபுடையன வென்ப தெவ்வா
றெனின்,

விபூதி பசுவின் மயத்தைச் சிவாக்கினியால் தகிக்க உண்டானமையின்
பசுவாகிய ஆன்மாவின் ஆணவமலத்தினை ஞானுக்கினியால் தகிக்க சிவா
னுபவத்தோ டியைபுடையதாயிற்று. அன்றியும், விபூதியின் வெண்மை
சித்தாகிய பரவெளியாந் தன்மையினையும், தொகுதியாற் பொருளாகக்
காணப்படுவதன்றி பகுதியாற் பொருளாகக் காணப்படாத அதனுண்மை
யகண்டாகாரமான பொருளாதலையுங் கண்டமாகாமையினையும் உணர்த்
தும்.

பஞ்சாக்கரந் தூலம், சூக்குமம், காரணம், மகாகாரணம், நிசானுபூதி
யென் றைவகைப்படும். அவற்றுள் காரண பஞ்சாக்கரமே ஈண்டெடுத்
துக்கொள்ளப்பட்டது. இது மலாட்சரம் திரோதாட்சரம் இரண்டு
நீங்க பதியட்சரம், அருள் அட்சரம், ஆன்ம அட்சரமாகிய மூன்றும் மாறு
தலாலுண்டாம் ஐந்தெழுத்து. மாறுதலின்றிய மூன்றெனவுங் கூறுவர்.
மூன்று ஐந்து என்னு மிவ்விருவகையினையு மோது முறையிற் பலபடவுங்
கூறுவர். அவையெல்லா மாசிரியர் முகத்துக்கேட்டுத் தெளிக. காரண

பஞ்சாக்கரமெனினும் முத்தி பஞ்சாக்கரமெனினு மொக்கும். இம்முத்தி பஞ்சாக்கரம் பாசவெழுத்து நீங்கி பதியெழுத்தும் பசு வெழுத்துமாய் நிற்றலின் பாசநீங்கி ஆன்மா சிவனோடு கலந்து நிற்றலோடியையுடையதாயிற்று.

இங்ஙனம் அக்கரமா யோதுமுறையு மனுபவமாய் நிற்கு முறையுந் தம்முளியையுடையன வென்பதை சிவஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திர மூன்று மதிகரணத்தில் "நிற்கு முறைமையு மோது முறைமையுந் தம்முளியைபில்வழி அஃது அதற்குச் சாதனமா மாறு யாண்டையதென்றொழிக." எனவும் காஞ்சிப்புராணத்தில் "நிற்குமுறையோதுமுறை விளங்கத்தேற்றி" யெனவுந் திருவருட் டோன்றலாகிய மாதவச் சிவஞான யோகிகள் அருளிச் செய்தமையால் இனிது தெளிக.

உருத்திராக்கம் சிவபெருமான் றிரு நேத்திரத்திருந்து கிருபை வெளிப்பாட்டினுண்டானமையின் அப்பெருமானே குருவா யெழுந்தருளி கிருபையினாற் றிருக்கண் சாத்தியதனோடியையுடையதாயிற்று. குருவென்றது ஈண்டு ஞானகுருவை. இவர் சிவமேயென்பது "தம் முதல்குருவுமா" என்னுஞ் சிவஞான போதத்தானும் "மன்னுமருட் குருவாகி வந்து" என்னுஞ் சிவஞான சித்தியாரானு மறிக.

இன்னும் நிற்குமுறையோ டியையுடையது. ஓது முறை என்றது போல மாலற நேயமலிந்தவர் வேடமென்ற சிவஞானபோதச் சுருதியானே திருவேடமும் இயைபுபற்றியதே யாமென்பது கவனிக்கத் தக்கது.

இவ்வாறு உயிர்க்குறும் பிறவி நோய் நீங்கிச் சிவாநுபவ மெய்தியவன் இயைபுபற்றிய சாதனமாக விபூதி உருத்திராக்கத்தை அணியவும் பஞ்சாக்கரத்தைச் செபிக்கவும் வேண்டுமென்றதனாலேயே பிறவி நோயை நீக்கும் விருப்பமுடைய ஒவ்வொருவரும் இயைபின்றிய சாதனமாக அணியவுஞ் செபிக்கவும் வேண்டுமென்பதாயிற்று.

அன்றியும் "மாலற நேய மலிந்தவர் வேடமு மாலயந் தானு மரனெனத் தொழுமே" எனச் சிவஞான போதச் சுருதி இத்திருவேடத்தை சிவனெனவே கண்டு வழிபடுகவென சீவன் முத்தனுக்கே விதிக்குமாயின் இவற்றின் பெருமை இத்துணைத்தென்று எவர்தா னளந் துரைக்க வல்லார்.

அன்றியும் இவ்வியாசத்தின் முதற்கணெடுத்துக்கொண்ட தமிழ்வேத மந்திரம் மந்திரமுந் தந்திரமும் மருந்துங் கொண்டென்றது ஆகியென்றதனானே யிறைவனே யென்பது இனிது விளங்கும்.

இவ்வாறு இறைவனே அருட்பெருக்கால் உயிர்கட்குக் கன்ம முதலிய வற்றால் தீர்க்கமுடியாத பிறவி நோயைத் தீர்ப்பதற்கு மணி மந்திர ஔடதங்களாய் விளங்கு முண்மையை நன்குணர்ந்து நல்லாசிரியனை அடுத்து ஞானதீட்சை பெற்று தடத்தமாகிய விபூதி உருத்திராக்கம் பஞ்சாக்கரத்தையும் அவைகளின் சொரூபமாகிய விறைவனையும், உள்ளவாறறிந்தும், அணிந்துஞ் செபித்தும் வழிபடின் பிறவித்துன்பம் நீங்கி அகண்டாகாரசச்சிதாநந்த வியாபகமாகிய சிவபெருமான் திருவருளைப் பெற்றுப் பேரின்பம் பெறுதல் சத்தியஞ் சத்தியம் முக்காலுஞ் சத்தியம்.

முடிபுரை.

இதனாற் போந்த தொகைப்பொருள்:—தமிழ்வேத மந்திரத்தில் மந்திரமுந் தந்திரமும் மருந்துமாகி யென்றது பஞ்சாக்கரம் உருத்திராக்க விபூதி யென்னும் பொருண்மேலன வென்பதூஉம், ஐந்து பூதங்களுள் மூன்று பூதங்களின் பிறட்சியே நோய்செய்யும் என்பதூஉம், அம்மூன்று பூதங்களை வாதபித்த சிலேட்டுமமென்று கூறுவ ரென்பதூஉம், உடம்பிற்கு அவற்றின் பிறட்சியே நோய் யென்பதூஉம், அது அபத்தியத்தினாலும், கன்மத்தினாலும் வருமென்பதூஉம், கன்மம், துற்பலகன்மம், பிரபலகன்மமென இருவகைப்படுமென்பதூஉம், அபத்தியத்தாலுண்டான நோய் ஔடத்தாலும் துற்பல கன்மத்தாலுண்டானநோய் இறைவனை வழிபடுதலானுந் தீருமென்பதூஉம், ஔடதம் பிராயச்சித்தம் தியானமென்னு மிவை முறையே விபூதி உருத்திராக்கம் பஞ்சாக்கரம் எனப்படுமென்பதூஉம், இவற்றால் உடற்குறு நோய் தீர்ந்தவா றிவ்வாறென்பதூஉம், இவற்றை அன்னிய மதத்தரும் கையாண்டுவருகின்றன ரென்பதூஉம், உயிர்க்குறுநோய் பிறப்பிறப் பென்பதூஉம், அவை வருதற்குக் காரணம் ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தமென்பதூஉம், இவற்றால் வருந்துமுயிர் நல்லாசிரியனைத் தேடுமென்பதூஉம், சிவமே குருவா யெழுந்தருளு மென்பதூஉம், தீட்சை உபதேசம் அநுபவமென்னு மூன்றானும் மூவினைகள் கெடுமென்பதூஉம், அம்மூன்றுமுறையே மணிமந்திரஔடதமென்பதூஉம், அநுபவம்வந்த மாணாக்கனுக்கு நிலைத்தற்பொருட்டு ஆசிரியர் அவற்றை அங்கமாய்க் கொடுத்தருளுவ ரென்பதூஉம், தீட்சை உபதேசம் அநுபவமென்னு மூன்று மணி மந்திர ஔடதமென்னு மூன்றனோடு இயைபுடையன வென்பதூஉம், அம்மூன்றும் இறைவனே யென்பதூஉம், அவற்றை முத்தர்களும் பெத்தர்களும் அணியவும் செபிக்கவும் வேண்டுமென்பதூஉம், அதனாற் சிவானந்தம் பெற்று வாழலாமென்பதூஉம் பிறவுமாம்.

பொ. முத்தையபிள்ளை,
சைவப்பிரசாரகர்.
தூத்துக்குடி.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையும் தலைவர் நியமனமும்.

பரிதாபி-ஆு வைகாசி-மீ 19௨ திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூஜை மிக்க சிறப்பாக நடத்தப்பட்டுப் பல அடியார்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமளிக்கப்பெற்றது. வழக்கம்போல் பிற்பகல் 3½ மணிக்குச் சன்மார்க்க சபை கூடிற்று. சபையார் விருப்பின்படி ஆ தெற்கூர் ஸ்ரீமத். கரு. முத்து. அழகப்பச்செட்டியாரவர்கள் தலைமையேற்றார்கள். தலைவரவர்கள் சபையைப்பற்றிய அபிப்பிராயங்கள் சிலவற்றை முகவுரையாகப்பேசிப் பின் இச்சபைக்கு நிரந்தர அக்கிராசனாதிபதி நியமன விஷயமாக நிருவாக சபையார் ஆலோசனையைக் கூறுமாறு விரும்பியபடி மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் நிருவாக சபையார் கருத்துணர்ந்து அவர்களுக்குப் பிரதிநிதியாக எழுந்து சபை நடத்து முறைமையையும் தலைவர்க்குரிய இலக்கணங்களையும் விரித்துக்கூறி இவ்வெல்லாம் நன்கமையப்பெற்று இச்சபையை இதுகாறும் மிக்க திருப்திகரமாக நன்கு நடத்திவந்து காலஞ்சென்ற ஸ்ரீமாந் வ. பழ. சா. பழநியப்பச் செட்டியாரவர்களின் அருமைச்சகோதரரும் அவர்களைப்போலவே நற்குண நற்செயல்களான் மேம்பாடுற்று விளங்குபவர்களும் சபையினிடத்து மிக்க அன்புடையாருமாகிய ஸ்ரீமத் வ. பழ. சா. அண்ணாமலைச் செட்டியாரவர்களே இச்சபைக்கு நிரந்தர அக்கிராசனாதிபதியாகவிருந்து சபையைச் செவ்விதின் நடத்துவதற்குரியவர்களாவார்களென்றும், இவ் விஷயம் சபையார் அங்கீகாரத்தின் பொருட்டு நிருவாக சபையார்க்குப் பிரதிநிதியாக என்னால் பிரேரேபணை செய்யப்பட்டதென்றுங் கூறினார்கள் பின்னர் இது ஸ்ரீ கரு. முத்து. அழகப்பச் செட்டியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டுமகாசபையாரால் அங்கீகரிக்கப்பெற்றது. உடனே ஸ்ரீ அண்ணாமலைச் செட்டியாரவர்கள் எழுந்து சபையாரை நோக்கி யான் பேரறிஞர்களால் நடத்துதற்குரிய இப்பெருங் காரியங்களை நிர்வகித்தற்குச் சக்தியில்லாதவனாயினும் சபையாருடைய பேரன்பையும் எனதன்பிற் சிறந்த தமையனார் அவர்களின் ஆணையையும் சிவபெருமான் திருவருளையும் துணையாகக்கொண்டு என்னாலியன்றவரை இச்சபையின் ஆக்கத்திற்கு வேண்டுவன செய்தற்

குரிய தலைமைப் பொறுப்பை யேற்கின்றேனென்றும், இப்பொறுப்பையேற்றற்கண் சபையாரின் ஆதரவையே முக்கிய ஆதாரமாகக் கொண்டமையால் என்னால் நடத்தப்படுவனவற்றிற் குறைபாடு நேரின் அதனைச் சபையாரே திருத்தி என்னைக் கௌரவப்படுத்த வேண்டுகின்றேனென்றும் கூறினார்கள். பின்னர் ஸ்ரீகணேசர் செந்தமிழ்க்கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ சிங்காரவேற்பிள்ளையவர்கள் "திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் மகிமை" என்னும் விஷயத்தையும், ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் "சமயபோதனை" யென்னும் விஷயத்தையும் நன்குக விளக்கி விரித்து இனிமைபெறவுபந்நியாசித்தார்கள். முடிவில் அன்று தலைமையேற்ற ஸ்ரீ கரு. முத்து. அழகப்பச் செட்டியாரவர்கள் சபையைப்பற்றியும் உபந்நியாசகர்களைப்பற்றியும் தம் நல்ல அபிப்பிராயங்களைக்கூறிச் சபையோர்களை மகிழ்வித்தார்கள். திருஞானசம்பந்தப்பெருமான் திருவருளால் அன்று இச்சபை தனக்குரிய தலைவரைப் பெற்றதாதலின் இது அப்பெருமான் திருவருளால் இந்நாட்டில் சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் பெருகி வளரச்செய்து எல்லார்க்கும் எல்லா நலன்களையும் பயக்குமென்ற உறுதியுடையேமாய்த் திருவருளைச்சிந்திக்கின்றேம்.

காரியதரிசிகள்

சன்மார்க்க சபை.

பிழைதிருத்தம்.

சென்ற சித்திரை மீ வித்தியாபாநுவில் ஆசுகவி என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள விஷயத்தில் சிறிது வேறுபாடுளது. அது என் சம்பந்தப்பட்டதாதலின் அதன் உண்மையை யானே வெளியிடப்புகுந்தேன்.

யான் ஒருநாட் காலை 9-மணிக்கு ஸ்ரீமத் சேதுபதி மஹாராஜா அவர்களைப் பார்த்தபோது அவர்கள் "வாருங்கள் சோதகுடி வித்துவான்" எனக் கூறியதுடன், "இஃதோர் வெண்பா ஈற்றடிக்குச் சரியாயிருக்கிறது" என்றும் கூறினார்கள். பின்னர் யான் கருதிச்சென்ற காரியத்தைத் தெரிவித்து உத்தரவு பெற்று பகல் 2 மணிக்கு அரண்மனைக்கு மீண்டும் சென்று தேவஸ்தானம் மானேஜர் அவர்கள் ஆபீசில் போயிருந்து கனம் வேந்தர் பிரான் திருவாக்கையே யீற்றடியாக அமைத்து இரண்டு வெண்பா எழுதி அம்மானேஜரவர்கள் வசம் கொடுத்து கனம் இறைவர் சோமான் சமுகத்திற் சேர்ப்பிக்குமாறு சொல்லிவிட்டு வந்தேன். இங்ஙனம் நிகழ்ந்திருக்க, இதற்குச்சிறிது மாறுகப் பாநுவில் வந்திருப்பது பற்றி இதன் உண்மை வெளியிடலாயிற்று.

எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தர்.

கண்டனூர்வாசி பொய்யரல்லர்.

பத்திரிகாபிமானிகளே !:—22—4—12 வைசிய மித்திரனில் "ஓர் வேண்டுகோள்" எனத் தலைப்பெயரிட்டு ஸ்ரீ தெ. அரு. சித. இராமநாதச் செட்டியாரவர்கள் எழுதியதைக் கண்ணுற்றனம். அவரும் எமது நண்பரே. அவர் "வேண்டுகோள்" எனத் தலைப்பெயரிட்டமைக் கிணங்க யாதொன்றையும் யாரிடத்தும் வேண்டிக்கொண்டாரல்லர். ஆதலின் ஸ்ரீ சாஸ்திரியார் அவர்கள் இங்ஙனம் எழுதவேண்டுமெனத் தம்பால் வேண்டிக்கொள்ளத் தாம் எழுதினமையைக் குறிப்பிடுவான் இப்பெயரிட்டனர் போலும். இஃதெங்ஙனமெனில் சென்ற மகரமதி 10வ யன்று மு. ராம. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் பெண்கல்வி வேண்டுமெனப் பிரசங்கித்த சபையில் சபாநாயக சாஸ்திரிகள் அதனை மறுத்துப் பேசியதைக்கண்டு புண்பட்ட நெஞ்சினராகி சாஸ்திரிகளுரையை மறுத்துப் பன்முறைபேசிய தெ. அரு. சித. இராம. அவர்கள் இப்போதிவ்வா றெழுதுதற்கு வேறுரியை பின்மையின் சாஸ்திரிகள் வேண்டுகோளென்றே துணிகின்றேம். சாஸ்திரிகளிடத்து இவர்களைப்போலவே மு. ராம. சோமசுந்தரஞ் செட்டியாரவர்களும் அபிமானமுடையரென்பதும் யாம் அறிவேம். தெ, அரு சித ராம. அவர்கள் அன்று சபையில் சாஸ்திரிகள் கூற்றை மறுத்துக் கூறியதுடன் பின்னரும் பலரிடம் இவ்விஷயத்தைப் பிரஸ்தாபித்துள்ளார்கள். இப்படி யிருக்க சாஸ்திரிகளுக்காகப் பரிந்து இப்போதிவ்வாறெழுதியது முறையன்று. சாஸ்திரிகள் பெண்கல்வி வேண்டாமென்று பேசியதைப் பலருமறிவரே. தற்காலம் பெண்கல்வி வேண்டுமென்பாரே பலராதலின் இவ்விஷயத்தை யறிந்தார் பலரும் தங்கள் தங்கள் கருத்தைப் பத்திரிகைவாயிலாக வெளியிடுவாராயினர். அவருள் ஸ்ரீ சத்திவேற்பிள்ளை யவர்களுமொருவராவர். சத்திவேற்பிள்ளையவர்களிடத்துக்கோபமுண்டானால் அதனை உத்தியோடுணர்த்தி யொழிக்கவேண்டு மன்றி மித்தையா யுரைப்பது வெறுக்கத்தக்கதன்றோ ? சோமசுந்தரஞ் செட்டியாரவர்களாற் றூண்டப்பட்டு சத்திவேற் பிள்ளையவர்கள் எழுதவில்லை. அங்ஙனம் ஐயப்பாடிருப்பின் அதனை அறவொழிப்பாராக.

யாம் இத்தகைய வாதங்களிற் றலையிட்டு வீணுரைபேசிப் பொழுது கழிப்பவரல்லேம். சாஸ்திரிகள் பெண் கல்வி கூடாதென்று பேசிய கொடுமையைச் சகிக்கமுடியாமையால் பாநுவில் வெளியிட்டேம். அது நன்னிலத்து விதைத்த வித்தாய் முளைத்துக் கிளைத்துப் பரவிப் பயனளிப்பதாயிற்று. வேண்டுகோளைக் கண்ணுற்ற நண்பரொருவர் 'கண்டனூர் வாசி பொய்யரா' எனக் கேட்கின்றார். அதனைக்கண்ணுற்ற பின்னர்தான் யாம் இதனை யெழுத முன்வந்தோம். கண்டனூர்வாசி பொய்யரல்லரென்பதையும் சபையில் பெண்கல்வி கூடாதென்று சாஸ்திரிகள் பேசியது மெய்யேயென்பதையும் யாவரும் அறிவாராக.

இங்ஙனம்,

கண்டனூர்வாசி.

அநுதாபச் செய்யுட்கள்.

மதுரை வித்தியாபாநு பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக்கவிராயர் புத்திரி சிவகாமியம்மாள் சிவபதமுற்றதறிந்து.

நீலலோசனி பத்திராதிபர் ஸ்ரீமத் ஜி. சதாசிவப்பிள்ளையவர்கள் எழுதியனுப்பிய கவிகள்.

கந்தசுவா மிப்பெயர்கொள் கவிராஜ நின்புதல்வி கௌரி பாதஞ்
சிந்தனைசெய் தேகினதாச் செழுஞ்சாம்ப சிவநயினார் செப்பக் கேட்டேன்
புந்திதடு மாறிநிதம் புலம்புவதாற் பயனில்லை புவியில் யாரும்
அந்தமுறல் மெய்யென்ப தறிந்திருக்கும் அறிஞனீ அயர லாமோ. (௧)

கலையெலாங் கற்றாலென் கற்றபடி நடந்தாலென் கலைகள் யாவும்
பலரறியச் சொன்னாலென் பண்பார்ந்த கவிபாடிப் பரப்பி னாலென்
நிலையறியா மெய்ஞ்ஞான நிலையுணர்ந்தே மோனநிலை நேசித் தாலென்
விலைமதியா மாணிக்க மெனுமக்க ளாசைதனை விலக்கப் போமோ. (௨)

ஆனாலுங் கைநழுவி யகன்றதற்கே யென்னசெய்தா லடைய லாகும்
வானாலு மீன்பிடிக்க வன்றூண்டில் தனைப்போட்டால் வருமோ ஐயா
மீனாலுங் கண்ணிபங்கன் சொக்கேசன் அருட்செயலை விலக்கு வார்யார்
தேனாலுங் கவிமழைபெய் செழுமுகிலே நாமென்ன செய்ய லாமே. (௩)

தந்தையரைத் துறந்தவருந் தாய்மாரைத் துறந்தவருந் தகுதி யான
மைந்தர்தமைத் துறந்தவரு மாப்பிளையைத் துறந்தவரு மனைவி யென்னுஞ்
சுந்தரியைத் துறந்தவருந் தொடர்ந்திருக்கு மூலகிதன்றோ தூய்மை யாளா
அந்தவகை மெய்த்துறவை யடைந்தக்கா லதைத்துறப்பா ரகிலத் தியாரே.()

தேவிகோட்டை ஸ்ரீமாந் அரு. அரு. சோம. சோமசுந்தரஞ்செட்டி யாரவர்களின் பத்தினியார் சிவபதமடைந்தமை கேட்டு

மதுரை வித்தியாபாநு பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக்கவிராயர். எழுதியனுப்பிய செய்யுட்கள்.

கல்லானைக் கிக்கருத்தக் கற்றானைக் கருணைநெடுங் கடலை யெல்லாம்
வல்லானை அறவெருத்து பாட்டானை மாணிக்க மலையை மேரு
வில்லானை வளையல்கொண்டு விற்றானை நால்வருக்கு விளக்கும் வேதச்
சொல்லானைப் பணிசோம சுந்தர தயாநிதியே சொல்லக் கேண்மோ. (௧)

நல்லார்க்கு நாயகமாய் நானிலத்துக் கோரணியாய் நுங்கள் போல்வார், எல்லார்க்கும் ஒருதாயாய் நினக்குவாழ்க் கைத்துணையா யிருந்த நங்கை, சொல்லார்க்கு மறைப்பெருமான் றுணைமலர்த்தா ளடைந்தசெய்தி சொல் லும் போது, கல்லார்க்கு மனமெனினுங் கசிந்துருகும் நின்னிலைமை கழறற் பாற்றோ. (௨)

பல்லாரும் புகழ்சோம சுந்தரபூ பாவென்ன பகர்வேன் நின்பால்
இல்லாளென் றொருபெயர்கொண் டெல்லாமுள் ளவளாகி யிருந்தா ளிப்போ
தில்லாளென் றுரைக்குமொழிப் பொருள்விளக்கக் கருதியோ இல்லாளானாள்
நில்லாமை யுலகுடைய தென்னினுமித் துயர்சகிக்கு நீர்மைத் தன்றே. ()

தேனாலு மமுதாலுஞ் செய்தனைய மொழிபகர்நின் றேவி விண்ணிற்
போனாலும் அவள்கற்பின் புகழிந்தப் புவியைவிட்டுப் போத லில்லை
மானாலுங் கரப்பரமற் பணிசோம சுந்தரபூ மானே என்ன
ஆனாலும் அவனருளே யெனத்தேறி மனக்கவலை ஆற்றிக் கொள்ளே. (௪)

புத்தகக் குறிப்பு.

திருக்காளத்திப் புராணம்:— பாண்டிநாட்டு வீரவநல்லூர் வாசியாயிருந்து பரிமளகவிராயர் என்னும் காரணப்பெயர் பெற்றுள்ள ஆனந்தக் கூத்தரென்னும் புலவர் திலகர் ௧௲௨௬ செய்யுட்களாலியற்றியருளிய இப் புராணம் தொண்டை நாட்டிலே தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களில் ஒன்றாயதும், ஸ்ரீ கண்ணப்பநாயனாருக்கு ஆறுநாட்களிலே முத்திகொடுத்தது முதலிய பலவகைப் பெருஞ்சிறப்பினையுடையதும் ஆகிய ஸ்ரீ காளத்தியின் மான்மியங்களைக் கூறுவது. செய்யுட்களெல்லாம் சொற்பொலிவும் பொருட் சிறப்பும் பத்திரசமும் அமைந்துள்ளன. இதுவரை வெளிப்படாதிருந்த இச் சிறந்த புராணத்தை ஓலைச்சுவடிகள் பலவற்றை வைத்து ஒப்புநோக்கிச் சுத்தப் பிரதியாக்கி யுதவியவர்கள் உலகப்பிரசித்திபெற்ற மஹாவித்துவான் சென்னை பிரவிடென்ஜி காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் மகா மகோபாத்தியாய ஸ்ரீ வே. சாமிநாதையரவர்களே. இவர்களது பரிசீலனைக்குட்பட்டதென்றதனாலேயே இந்நூல்தன்கண்ணுள்ள அரும்பதவுரை கதாவிசேடம் முதலிய பற்பல ஆராய்ச்சிக் குறிப்புக்களை யடைந்து வெளிப்பட்டிருக்குமென்பது யாவரு முணர்வராதலின் இங்கு விரிக்கவில்லை. இத்திருக்காளத்தி நாதரது ஆலயத்தின் கற்பணிகளைப் புதுக்கிப் பொற்பணியாக்கிக் கும்பாபிஷேகம் செய்வித்தவர்களும், நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் சிறந்த தருமசீலரும், சிவநேயச்செல்வர்களும் ஆகிய தேவிகோட்டை ஸ்ரீமாந் மெ. அரு. நா. இராமநாதச்செட்டியாரவர்களும், ஸ்ரீமாந் மெ. அரு. அரு. அருணாசலஞ் செட்டியாரவர்களுமே இச்சொற்பணியையும் புதுக்கி நற்பணியாக்குவித்த மகோபகாரிகளாகின்றார்கள். இங்ஙனமே திருப்பணி செய்வித்துக் கும்பாபிஷேகம் நடத்தும் ஏனையரும் இவர்களைப் பின்பற்றி அவ்வத் தலபுராணங்களைச் செவ்வை செய்வித்து வெளியிடச் செய்வார்களாயின் மிக நன்றாகும். இவ்வரிய நூலை நமது பார்வைக் கனுப்பிய இவ்விருதிறத்தார்கட்கும் வந்தனத்துடன் நன்றிபாராட்டுகின்றோம். புத்தகம் கண்கவர் வனப்பினதாய் மிகவும் கனத்த கடிதத்தில் சுத்தமான எழுத்துக்களால் பதிப்பிடப்பெற்று நன்கு கட்டப்பெற்றுளது.

பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

மதுரைத் தமிழ்ச்சங்கம்:—24—5—12 முதல் 26உ வரை 3 நாட்களிலும் இதன் பதினோராவதாண்டு பூர்த்திக்கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நிறைவேறியது. மதுரையம்பதியில் டிப்டி கலெக்டரும், செந்தமிழபிமானச் சிறப்புற்றவரும், உபகார குணசீலரும் ஆகிய ராவ்பகதூர் ஸ்ரீமாந். M. ஆறுமுகம்பிள்ளையவர்கள் பீ. ஏ. அக்கிராசனம் வகித்தார்கள். அயலூர் வித்துவ அங்கத்தினரும், சிலர் வந்திருந்தனர். சில வியாசங்கள் வாசிக்கப்பட்டன. அயலூர் வாசிகட்கு உபசரணை நன்றாக நடந்தது. இத்தமிழ்ச்சங்கத்துக்கு அக்கிராசனாதிபதியாக ப்ரும்மஸ்ரீ. பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களையும், உபாக்கிராசனாதிபதியாக கானாடுகாத்தான் ஸ்ரீமாந். சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்களையும், மானேஜிங் கமிட்டி மெம்பராக ப்ரும்மஸ்ரீ ப. நாராயணையரவர்களையும், இம்முறைக் கூட்டத்தார் தெரிந்தெடுத்தமை தெரிந்து மிகவும் சந்தோஷிக்கிறோம். இவர்கள் எல்லாரும் மிகவும் தகுதியுடையவர்களே யென்பது யாவருமறிவாராதலின் யாம் விசேடமாக எழுதவேண்டியதில்லை. இது என்றும் நன்று நிலவுமாறு இறைவன் திருவருள் புரிவாராக.

* * *

மதுரை முனிசிபல் சேர்மன்:—இவ்வூர் முனிஸிபல் சேர்மேனாக ஸ்ரீமாந். கே. வி. ராமாச்சாரி அவர்களை கௌன்ஸலர்கள் தெரிந்தெடுத்ததை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்காமையால் இப்போது திருநெல்வேலிஜில்லா டிப்டி கலெக்டர் கனம் டேவிட் நவமணி நாடாரவர்களை கௌன்ஸலர்கள் தெரிந்தெடுத்திருப்பதாக அறிகிறோம். மிஸ்டர் நவமணிநாடாரவர்கள் மிகவும் சாமர்த்தியசாலி யெனவும், நற்குணசீலரெனவும் தெரிவதால் நகரவாசிகட்கு அநேக நன்மைகள் கிடைக்குமென்று பலரும் எதிர்பார்க்கின்றார்கள்.

* * *

திருவாப்பனூர் சிவாலய கும்பாபிஷேகம்:—இடப ரவி 13உ யன்று மதுரையைச் சார்ந்த திருவாப்பனூரில் ஸ்ரீ குரவகாமோத குந்தளாம்பிகா சமேத அன்னவிநோதர் எழுந்தருளியிருக்கும் ஆலய சீரணோத்தாரண திருப்பணி வேலை முடிந்து கும்பாபிஷேகமும் வெகு சிறப்பாக நிறைவேறியது.

பத்திராதிபர்.

உ

குமரன்றுணை.

ஸ்ரீமத் வ. பழ. சா. பழநியப்பச் செட்டியாரவர்கள் பிரிவாற்றாமை.

மேலைச்சிவப்பட்டிச் சன்மார்க்க சபை ஸ்தாபகரும் நிரந்தர அக்கிராசனாதிபதியும் ஆகிய இவ்வணிகர் திலகர் 6—5—12 காலை 5-மணிக்கு அநித்தியமாகிய இவ்வுலக வாழ்வை நீத்து நித்தியமாகிய சிவபதவியையடைந்தார்கள். இவர்கள் பிரிவானது தமிழுலகுக்கும், சைவத்துக்கும், வித்துவான்கட்கும், பலவகையான பொது நன்மைகட்கும் விசனத்தையே யுண்டாக்கிவிட்டது. சென்ற 3 வருஷங்களுக்குள் தம்இனத்தவராகிய நாட்டுக்கோட்டை வணிகமக்களுக்குக் கல்வியபிவிருத்தி தழைத்தோங்கும் வண்ணம் உற்சாகப்படுத்தி வந்தனர். இப்போது இவர்விஷயமாக அங்கங்கே அநுதாபக்கூட்டங்கள் ஏற்பட்டன. இந்தப் புண்ணிய புருஷரைப்பற்றிய எல்லா விஷயங்களையும் அறிய நம்மவர்க்கு இச்சமையம் அதிக ஆவலுண்டாகுமாதலின், மேலைச்சிவப்பட்டிச் சன்மார்க்க சபையார் அநுதாபக் கூட்டத்து விஷயங்களை இதனடியில் எழுதுகிறோம்.

15—5—12 புதவாரம் மாலை 4-மணிக்குச் சபைகூடியது. சோழவந்தான் வித்துவான் ஸ்ரீ அ. சண்முகம் பிள்ளை யவர்கள், மதுரை மு. ரா. கந்தசாமிக்கவிராயர், மகிபாலன் பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள், ஆ. தெற்கூர் ஸ்ரீ கரு. முத்து. அருணாசலஞ் செட்டியாரவர்கள், ஷை யார் தம்பி ஸ்ரீ கரு. முத்து. அழகப்பச் செட்டியாரவர்கள், கண்டர மாணிக்கம் ஸ்ரீ செ. சி. நா. கந்தசாமிச் செட்டியாரவர்கள், ஷையார் தம்பி ஸ்ரீ. செ. சி. நா. இலக்குமணச் செட்டியாரவர்கள், வலயபட்டி ஸ்ரீ க. அருணாசலச் செட்டியாரவர்கள், வலயபட்டி ஸ்ரீ வயி. வ. இராமநாதச் செட்டியாரவர்கள், மகிபாலன்பட்டி ஸ்ரீ மு. சின்னயச்செட்டியாரவர்கள் முதலிய அபிமானிகள் பலர் வந்திருந்தனர். சபையோர் விரும்பியபடி ஸ்ரீ கரு முத்து. அருணாசலஞ் செட்டியாரவர்கள் அக்கிராசனம்

வகித்து முன்னுரையாகச் சில கூறியபின் ஸ்ரீ மு. சிங்கயச் செட்டியாரவர்கள் அடியில் வருமாறு காலஞ்சென்ற ஸ்ரீ வ.பழ. சா.பழநியப்பச் செட்டியாரவர்களின் சரித்திரச் சுருக்கத்தைக் கூறினர்கள்.

"நம்மையெல்லாம் துயர்க்கடலில் புகுத்திப் பரலோகஞ் சென்ற இவ்வுத்தம புருஷர் புதுக்கோட்டை சம்ஸ்தானத்தைச் சேர்ந்த மேலைச்சிவப்பட்டியில் நாட்டுக்கோட்டை நகரத்தாராகிய எம் வணிகர் மரபில் 1873 ௵ நவம்பர் ௴ 23௳ ஸ்ரீ சாமிநாதச் செட்டியாருக்குச் சீமந்த புத்திரராகப் பிறந்தார். பாலப்பருவத்திலேயே கல்விப் பயிற்சியும் இரக்கமும் உடையராயினர். தெய்வ பக்தியிற் சிறந்தார். நாகையைச் சார்ந்த சிக்கல் என்னும் நகரில் ஸ்ரீ சிங்காரவேலவர் ஆலயத்திருப்பணித் தருமத்துக்குப் பதினெண்ணாயிரம் ரூபா கொடுத்தார். அநேக வித்துவான்கட்குத் தக்கபடி பொருளுதவி புரிந்துவந்தார். பொதுநலப் பிரியர். இச்சன்மார்க்க சபையை ஸ்தாபித்து 3௵ காலமாக மிகச் சிரத்தையுடன் நடத்தி 12000 ரூபா செலவிட்டு நூதன சபாமண்டபமும் நிர்மாணஞ் செய்தார். இச்சபையின் அங்கமாக ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலையும் புத்தகசாலையும் ஏற்படுத்தினர். இச்சபையின் பெருமை எமது வணிகமணிகள் பலர்மனத்தையும் கவர்ந்துகொள்ளும்படி மிக்க கௌரவமாக வருஷபூர்த்திக் கொண்டாட்டங்களை நடப்பித்தார். யாரிடத்திலும் அபிமானமும் பரோபகாரமும் மிகக்கொண்டிருந்தார். இவர் சில மாசங்களாக இருமல் வியாதியால் வருந்தி 6—5—12 காலை 5-மணிக்குச் சிவபதமடைந்தார். இக்கொடுஞ் செய்தி கேட்டவரெல்லாம் பதைபதைத்துத் துடிப்புறுவார்களானல் இவர்களை யீன்ற மாதாவும், மனைவியாரும், இராமபிரானுக்கு வாய்த்த இளையபெருமாளைப்போல் இவர்கட்கு வாய்த்த அருமைத் தம்பியாகிய ஸ்ரீ வ. பழ சா. அண்ணாமலைச் செட்டியாரவர்களும், சிவனடியான் செட்டியார், சிதம்பரஞ் செட்டியார், சிங்காரவேல் செட்டியார் என்னும் மூன்று செல்வப் புதல்வர்களும், இரண்டு செல்வப் புத்திரிகளும், மற்றுமுள்ள நெருங்கிய ஞாதி முதலிய பந்துவர்க்கத்தினரும் எங்ஙனம் சகிப்பார்கள்? அந்தோ பரிதாபம்! இந்நற்குணக் களஞ்சியம் தனது 39-வது வயது முடியுமுன் இவ்வுலகத்தை யகன்றதே! இவர்கட்குப் பிணிவந்த சமையம் இவ்

வியாதி உயிருடன் திருமேயன்றி யிடையிலொழியாதென்று இவர் கட்குத் தோன்றியதுபோலும். அப்பொழுது கொழும்பிலிருந்த தமது அருமைத்தம்பியார் வருமுன் எங்கே மரணம் சம்பவித்துவிடுமோ என்று கருதி தமது தம்பியாருக்கு ஒரு கடிதம் எழுதிவைத்திருந்தனர். இவர்கள் காலஞ்சென்றபின் அக்கடிதம் பார்க்கப் பட்டது. அதிலடங்கிய விஷயங்கள் அடியில் வருவன:—

எனக்கு உடம்புக்கு இருக்கிற மாதிரி கடுமையாகவே இருக்கிறது. இறைவனருளின்படி நடக்கட்டும். அதைப்பற்றிக் கவலைப் படுவது உசிதமன்று.

வினையுள்ள அளவுமே கூடி நிற்கும்.

இருப்பது போய் எந்நாளிருப்பினும் இறப்பது நிச்சயம்.

ஒருவரும் கொண்டுபோகக் கூடியது ஒன்றுமேயில்லை. பாவ புண்ணிய மிரண்டுமே பின் வருவது நிச்சயம்.

சன்மார்க்க சபையைத் தளரவிடாது எப்பொழுதும் நீடித்து நடத்தி வருக.

குடும்பத்தை ஒருநாளும் கவலைக்குள் விடாது கௌரவமாகவே கொண்டு வருக.

வியாபார முதலியன அளவோடு செய்து வருக.

மற்றக் காரியங்களெல்லாம் நன்மையாகவும் சாந்தமாகவும் நடத்தி வருக.

இங்ஙனம்

வ. பழ. சா. பழநியப்பசெட்டி

என்று, கையொப்பம் செய்து வைத்திருந்தார்கள். இவர்களைப் போன்ற தைரியசாலிகள் கிடைத்தலரிது. ஆனால் இவர்கள் செய்யக் கருதிய நன்மைகளை யெல்லாம் இவர்கள் அருமைச் சகோதரர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் செய்துவருவாரென்பதில் சந்தேகமில்லை. இவ்விருவர் குடும்பத்தார்களையும் கடவுள் ரக்ஷிப்பாராக." என்பதே.

பின்னர் வித்துவான்களியற்றிய இரங்கற்பாக்கள் படிக்கப் பட்டன. அதன்பின் இவர்கள் பிரிவுக்கிரங்கி தேவிகோட்டை ஸ்ரீ மெ. அரு. நா. இராமநாதச் செட்டியாரவர்கள், கானாடுகாத்தான்

ஸ்ரீ ஆனரபிள் சா. ராம. மு. இராமசாமிச் செட்டியாரவர்கள், மதுரை ஸ்ரீ வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியாரவர்கள், கொழும்பு ஸ்ரீ கரு. முத்து. அழகப்பச் செட்டியாரவர்கள், பம்பாய் ஸ்ரீ கரு. முத்து. இராமநாதச் செட்டியாரவர்கள், கொழும்பு செ. சி. நா. இராமசாமிச் செட்டியாரவர்கள், கண்டனூர் ஸ்ரீ தெ. அரு. சித. இராமநாதச் செட்டியாரவர்கள், மதுரை மு. ரா. கந்தசாமிக் கவிராயர், தூத்துக்குடி சைவப் பிரசாரகர் ஸ்ரீ பொ. மு. முத்தயபிள்ளை யவர்கள் முதலான பலர் அனுப்பிய அனுதாபத் தந்திகளும், தேவிகோட்டை ஸ்ரீ அரு. சோம. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள், கொழும்பு ஸ்ரீ கரு. முத்து. தியாகராஜச் செட்டியாரவர்கள், இரங்கோன் ஸ்ரீ மு. ராம. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள், மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தார், தூத்துக்குடி சைவசித்தாந்த சபையார், நெடுவை வித்துவான் ஸ்ரீ இராமசாமி யய்யங்காரவர்கள், கல்லுப்பட்டி ஸ்ரீ. த. நாராயண சாஸ்திரியவர்கள் முதலான பலர் அனுப்பிய அனுதாபக் கடிதங்களும் வாசிக்கப்பட்டன.

பின்னர் முறையே ஸ்ரீ கரு. முத்து. அழகப்பச் செட்டியாரவர்கள், ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், ஸ்ரீ அ. சண்முகம் பிள்ளையவர்கள் இந்நால்வரும் காலஞ்சென்ற புண்ணிய புருஷரது நற்குண விசேடங்களைப் பாராட்டிப் பரிவுடன் பேசினார்கள்.

முடிவில் அக்கிராசனாதிபதியவர்கள் பேசியன வருமாறு:—

காலஞ்சென்ற ஸ்ரீ வ. பழ. சா. பழநியப்பச் செட்டியாரவர்களது நற்குண நற்செயல்களைப்பற்றி எனக்கு முன்னே பேசிய நண்பர்கள் நன்குகூறினார்கள். ஆனாலும் நான் அவர்களுடன் ஒரு சாலை மாணாக்கனாகிக் கல்விபயின்ற சகபாடியாதலின் அதிபாலப் பருவமுதற் கொண்டே அவர்களது அரும் பெருங் குணஞ் செயல்களை நன்கறிவேன். எக்காலத்தும் பிறவுயிர்க்கிரக்கமும் அடக்கமும் சாந்தமும் மிகவுடையவர். பிறர்துயர்தீர்க்கவும் தன்னாலான உபகாரங்களை உடனே செய்யவும் இயற்கைப்பிரியங் கொண்டிருந்தவர். தெய்வபக்தியிற் சிறந்தவர். சொல்லுறுதி தவறாதவர்.

கல்விப்பிரியர். "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார், தோன்றலிற் ருேன்ருமை நன்று" என்ற தேவர் மொழியைக் கடைப்பிடித்துள்ளவர். உடுக்கை யிழந்தவன் கைபோல இடுக்கண்களையும் நட்புரிமை வாய்ந்தவர். எண்ணித்துணியும் நிபுணர். பொது நலங்களில் இடையரு ஊக்கமுடையவர். இவர் பிரிவு நம் தமிழ் நாட்டுக்கே துன்பத்தை விளைப்பதாயினும் எம் வணிகமக்கட்குப் பெரிதும் துயரத்தையுண்டுபண்ணிவிட்டது. அதிலும் எனக்கும் என் சகோதரர்கட்கும் மிகப்பெருந்துயரந்தந்துவிட்டது. நாம் என்செய்வோம்? "ஊழ்வினை யொருவரா லொழிக்கற் பாலதோ" என்று கூறிய பெரியார் வாக்கின்படியே விதியை வெல்ல யாரா லாகும்? இவர் ஒரு தீர்க்கதரிசிபோல தமது மரணத்தை முன்னுணர்ந்து தம் அருமைத் தம்பியாருக்கு எழுதிவைத்திருக்கிற மதுரவாசக லிகிதத்தாலேயே இவரது மனக்கிடக்கையை யாவரும் நன்கறியலாம். வித்துவான்கள் கூறிய இரங்கற்பாக்களெல்லாம் இவர் புகழை முழக்குகின்றன. இவர் பிரிந்தாரென்றவுடனே இனி சன்மார்க்கசபை எவ்வாறு நடைபெறுமோ எனப் பலர் ஐயுறுதல் கூடும். இச்சபை தொடங்குங்காலத்தில் இவர் கொழும்பிலிருந்தார். இவர் தம்பி ஸ்ரீ அண்ணுமலைச் செட்டியாரவர்கள் வித்துவான் ஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்களின் விருப்பத்திற்கிணங்கி இச்சபையைத் தொடங்கினுர்கள். பின்பு கொழும்பிலிருந்துவந்த இவர் மிக மகிழ்ந்து தாமே முன்னின்று நடத்திவந்தார். இதனுல் இச்சபைக்காரியங்களை யெல்லாம் தம்பியாகிய ஸ்ரீஅண்ணுமலைச்செட்டியாரவர்கள் முன்னிலும் நன்ருகவே நடத்துவார்களென்பது நிச்சயம். அதைப்பற்றி நாம் சிறிதும் ஐயுறுதற்கு இடமில்லை. அன்றியும் "சன்மார்க்க சபையைத் தளரவிடாதே" என்று தமையனுர் கூறிய மணியோசை தம்பியார்மனத்தில் இடைவிடாமல் முழங்கிக் கொண்டேயிருக்கும். புத்திரர்களும் புத்திரிகளும் தம்பியாரும் தம்பியார் மக்களும் இஷ்டசித்திகளைப்பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு வாழும்படி திருவருள் செய்யும் வண்ணம் ஸ்ரீ சிங்காரவேலவர் திருவடி மலர்களைச் சிந்திப்பதே இனி நமது கடமையாகும். "இன்புடைய பழநியப்பன் விண்புகினும் புகழுடம்போடிவணுற்ருனே" என்று ஸ்ரீ கந்தசாமிக் கவிராயரவர்கள் கவியிற் கூறியவாறு

பழ. அவர்களின் புகழுடம்பு இவ்வுலகத்தில் நிலைத்துள்ளது போல வே பூதவுடம்பின் தோற்றமும் நிலைத்திருக்கும்படி நாம் செய்ய வேண்டும். அவர்களை நாமெல்லாரும் மறவாமைக்கு அறிகுறியாக அவர்களின் உருவப்படத்தை அழகாகச்சித்திரிக்கச் செய்து அதனை இச் சன்மார்க்க சபையில் வைக்கவேண்டும். இதுதான் கடைசி யாக நாம் அவர்கட்குச் செய்யும் கடமை" என்று கூறி முடித்தார் கள். உடனே சபையார் யாவரும் கரகோஷம் செய்து அங்ஙன மே செய்யவேண்டும் என்று கூறினார்கள்.

பின்னர் ஸ்ரீ வ. பழ. சா. அண்ணாமலைச்செட்டியாரவர்கள் அருமைத் தமையனாரை யிழந்த துயரமிகுதியால் தாம் இச்சமை யம் கூறவேண்டிய சில விஷயங்களைத் தமக்காக எழுந்து பேசும் படி ஸ்ரீமாந். கரு. முத்து. அழகப்பச்செட்டியாரவர்கட்குக் குறிப் பிட அவர்கள் எழுந்து பேசியன:—

"சபையோர்களே! ஸ்ரீமாந். அண்ணாமலைச்செட்டியாரவர்க ளபிப்பிராயப்படி அவர் கூறும் சில வார்த்தைகளை அவர்களுக்காக நான் கூறுகின்றேன். தமது தமையனார் பிரிவாற்றுமை விஷயத் தில் ஈடுபட்டு நீங்கள் எல்லாரும் இவ்வளவுதூரம் அபிமானத்துடன் அனுதாபங்காட்டியதற்கு உங்களெல்லொருக்கும் நன்றிபாராட்டுங் கடமைப்பட்டுள்ளார்கள். சன்மார்க்கசபை விஷயத்தில் தமைய னாரவர்களிருந்தபோது நீங்களெல்லாம் எவ்வளவு அபிமானம் பாராட்டிவந்தீர்களோ அவ்வண்ணமே இனிமேலும் அபிமானம் பாராட்டி ஆதரிக்கும்படி உங்களை வேண்டிக்கொள்வதுடன், உங்க ளெல்லாருடைய விருப்பப்படி தாம் செய்யவேண்டிய காரியங்க ளைச் சிறிதும் குறையின்றிச் செய்வதாக வாக்களிக்கின்றார்கள். தாம் எவ்வளவுதான் முன்னின்று வளர்த்தாலும் பேர்மாத்திரையே யாகுமெனவும், உண்மையில் சபையை வளர்ப்பவர்கள் சபையோர் களே யெனவும் கூறுகின்றார்கள். சபை விஷயமாகவும் மற்றும் பொதுத்தரும விஷயமாகவும் தமது தமையனாரவர்கள் கட்டளை யையும் சபையோர் விருப்பத்தையும் தாம் சிரமேற்கொண்டு அன் புடன் நடத்துவதாகவும், அதற்குத் திருவருள் முன்னின்று துணை புரியவேண்டுமெனவும், சபையார்கள் ஆசீர்வதிக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றார்கள்." என்று கூறி முடித்தார்கள். பின்பு எல்லாரும் ஒருமனப்பட்டுக் கடவுளைப் பிரார்த்தனைசெய்து மாலை 7 மணிக்கு அவரவர் இருப்பிடங்கட்கேகினார்கள்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

உ

ஸ்ரீமத் வ. பழ. சா. பழநியப்பச் செட்டியாரவர்கள்

பிரிவாற்றாமையால் வித்துவான்களியற்றிய

இரங்கற்பாக்கள்

மறைத்திருவன் சுவாமி விருதை ஸ்ரீமத்

சிவஞான யோகிகளியற்றிய வெண்பா.

—;o:—

கற்றவர்பா லன்புங் கழகநடத் துந்திறனும்
அற்றவர்க்கன் பாலீவு மற்றறிவென் பேன்—மற்றவரோ
சன்மார்க்க மென்கழகஞ் சார்மன் பழநியப்பப்
பன்மாண்ப னற்றனனென் பார்.

சோழவந்தான் வித்துவான் ஸ்ரீமத்.

அ. சண்முகப்பிள்ளையவர்க ளியற்றியன.

—:o:—

புரப்பாரே யினியதமி ழினியாரே பொற்பாரே யோயி னாரே,
கரப்பாரே கடுப்பவுருக் கரந்தனையே கரப்போராய் கவிகைக் கொண்
டால், நிரப்பாரே துரப்பாரே பழனியப்ப வணிகர்குல நிருபா
வாங்கே, இரப்பாரே யில்லாரே யுள்ளாரே யென்னநினைந் தென்
செய் தாயே. (க)

கணமின்றே யிடியெனநோய் பழநியப்ப வள்ளலுற்ற் கண்ட
காலே, குணமின்று நாளையாம் பின்போதுங் கூற்றென்னுங் குறிப்
போ ராமே, குணமின்று நாளையாம் பின்போதுங் கூற்றெனவே
குறித்தே மாந்தோந், தணமின்று யெனினுநட்டார்த் தீர்தலினுந்
தீப்புகுதல் சால நன்றே. (உ.)

மதியொன்றிற் குணமாமென் றுருடம்பார்த் துட்கவலை மாற்றி வந்தோம், விதியொன்றி னுங்கா லரிதெனற்கோர் சான்றே போல் வெந்நோய் விஞ்சி, மதியொன்று மருந்தினான் மற்றொன்றாற் றீராது மாய்த்த தந்தோ, கதியொன்று புகழ்நிறுத்த பழநியப்ப மாலையினிக் காண லாமே. (௩)

பேர்படைத்த வணிகர்குலப் பெருமானே சிறுமானே பிறங்கு நகையான், நார்படைத்த வுள்ளத்தா லெவ்வுயிர்க்குந் துன்புறுத்தா நலமேற் கொண்டு, சீர்படைத்த கற்றாரு மற்றாரு முற்றாருஞ் சிந்தை நோவப், பார்படைத்த புகழாளா நீயிரிந்தா யிதுதகுமோ பகரு வாயே. (௪)

தன்னலமோ ரணுவேனுங் கருதாது பிறர்நலமே தகச்சிந் தித்தே, யொன்னலருங் கொண்டாட வொப்புரவு செய்துவந்த வுரவோ னேநீ, யுன்னலமே யிதுபொழுது மிகக்கருதி வானத்தி னுற்றா யாங்கே, யென்னலநீ யுற்றாலு மியாம்வருந்தச் சென்றாயீ தென்னே யென்னே. (௫)

மன்னுகரு முத்தருணா சலவேளு மழகப்ப வள்ள லுந்தான், பன்னுமண்ணா மலைப்பேர்கொ ளிளவலொடு கதிரேசப் பண்பு ளோனு மென்னுமிவர் சன்மார்க்க சபைவளர்ப்பா ராதலினா லீண்டு நீங்கி, மன்னுமந்தச் சிவபுரியுங் காண்பலென்று சென்றனையோ மதிவல் லோனே. (௬)

மதுரை வித்தியாபாநு பத்திராதிபர்

மு. ரா. கந்தசாமிக்கவிராயர் கூறியன.

—:o:—

பொன்சாரப் புகழ்பொருந்தும் பழநியப்ப வள்ளல்விண்ணிற் புக்கா னென்றென், முன்சாரத் தருங்கொடிய மின்சாரத் தந்திவந்து மொழிநூல் வல்லார், மின்சாரத் திரட்சியிடி வீழ்ச்சியெனற் கிலையை யவெனை வெதுப்பிற் றந்தோ, பின்சாரு மிடமறியே னென்னையுமறந் தனனென்ன பேச வேனே. (௧)

இன்றுமுதற் சுகமாகு நாளைமுதற் சுகமாகு மென்றே யாரு, நன்றுபுகன் றனரொருவர் வாக்கேனும் பலித்திலதே நாதன் பாதஞ், சென்றுமகிழ்ந் தனையுனக்கோர் குறையில்லையாந் தாயிழந்த சேய்போ லானோம், என்றுநினைக் காண்பேமோ பழநியப்ப மாமணியே யென்செய் வோமே. (௨)

நீயுற்றா யாதலினாற் றாயுற்றா ரெனமகிழ்ச்சி நேர்ந்தோஞ் சற்று, நோயுற்றா யெனவறிந்து புண்பட்ட வெம்மனத்தி னுதிக்கோல் பாயத், தீயுற்றா லென்னவிண்ணிற் போயுற்றா யெனுங்கொடிய செய்தி கேட்டோம், வாயுற்றா ரெவரிரங்கார் பழநியப்ப வள்ளானீ வந்தி டாயோ. (௩)

அருணிறைந்த சாகரமே யன்பினுக்கோ ராகரமே யழகின் வைப்பே, பொருணிறைந்த மொழியமுத புஞ்சமே யறத்துணையே புகழின் வாழ்வே, தெருணிறைந்த மெய்ஞ்ஞான சேகரமே வணிகர்குல திப மேநீ, மருணிறைந்தே மாக்கியெமை யகன்றனையே பழநியப்ப மதிவல் லோயே. (௪)

எல்லார்க்கும் பொதுவன்புன் னிடத்துளதா யினுந்தாந்தா மெய்தும் பேற்றாற், பல்லாருஞ் சிறப்பன்பு தத்தமக்கே யுளதென்னும் படிவாழ் வுற்றாய், பொல்லாரு நல்லாரும் புகழ்ந்துரைக்கும் பழநியப்பப் பூமா நீதி, வல்லாய்நீ திரும்பியிவண் வருவாயோ வாராயோ வழுத்தி டாயே. (௫)

அறந்தனையே புரிந்துவந்த பழநியப்ப வள்ளானல் லவையைக் கூட்டிச், சிறந்தபெரும் புலவர்பிர சங்கசிர வணமேவுஞ் செல்வமொன்றே, திறந்தருநல் லுயிர்த்துணையென் றிருந்தனைசன் மார்க்கசபைச் சிறப்பைக் கூட, மறந்தனையோ மறந்தனையோ மறந்தனையோ மறந்தனையோ வணிகர் வாழ்வே. (௬)

முக்கனித்தேங் கமழ்மேலைச் சிவபுரியிற் சிறப்பெய்தி முதுநாவல்லோர், பக்கமுற வாழ்ந்திருந்த பழநியப்ப வள்ளாலைப் படிவிட்டேகி, அக்கணமே யொருமேலைச் சிவபுரியிற் சிறப்புற்றா யவனிங்கொப்பத், தக்கதமிழ் நாவலவர் சபையுளதோ வங்ஙனெங்ஙன் சகிக்கின் றாரே. (௭)

நிகரத்தா னலதுபிறி தமையாத பெரும்பேறு நிலத்து மேவச்
சிகரத்தா லுயர்மேலைச் சிவபுரிவாழ் பழநியப்பச் சீமா னேநன்
னகரத்தா ரென்னுமிரு வகையாரு மழுதழுது நைந்து வாடிப்
பகரத்தா னடங்காத துயரடைய நீபிரிந்த பான்மை யென்னே. ()

நன்மார்க்க மிதுவென்னச் சன்மார்க்க சபையைநிலை நாட்டி வைத்தாய், பன்மார்க்கத் தரும்வியப்பத் தமிழ்க்கலா சாலைவைத் துப் பாது காத்தாய், வென்மார்க்க மிஃதொன்றே யெனக்கருதிப் பொறைமுழுது மேவி வாழ்ந்தா, யுன்மார்க்க மெவர்க்குவரும் பழநியப்ப நன்னாம முறுமே லோனே. (கூ)

எத்தொழிலும் பிறரெவரு மகிழ்வடையும் படிபுரிந்தா யின்று காறு மித்தருணங் கண்டவருங் கேட்டவருங் கதறியழு திரங்கி யேங்க நித்தனடி மலரடைந்தா யிதுமுறையோ விதிதகுமோ நிமல மான பத்தருறை முத்திநிலை யைத்தழுவும் பழநியப்பப் பண்புள் ளோயே

மணமிலாப் பல்விருக்கச் சோலையுட்சந் தனமொன்று மற்றைத் தாருக், கணமெலாங் கந்தமுள வெனக்காட்டு மதுபோலக் கல்வி யாதி, குணமிலா ரையுஞ்சிறந்த குணமுளா ரெனக்காட்டுங் குணப் பொற் குன்றே, பணமுளார் பலர்கிடைப்பர் நின்னையொவ்வார் பழ நியப்பப் பண்புள் ளோனே. (கக)

எவ்வுயிர்க்கு மொளிகொடுக்கும் வானிரவி கிரஹணத்தா லிரு ண்ட காலை, யவ்விரவிக் குதவுகிற்பா ரொருவரிலர் நீயிருந்திவ் வவனிக் கெல்லாஞ், செவ்வுதவி பலபுரிந்தாய் நின்பிணிதீர்ப் பதற் கொருவர் சேரக் காணே, னெவ்வுமுனக் கிரவியெனக் குயிர்த்துணை யாம் பழநியப்ப வுயர்பூ மானே. (கஉ)

ஐபாநின் றனைப்போல வணிகருக்குட் பேர்படைத்தா ராரு முண்டோ, மெய்யாகச் சைவமெங்கே தமிழெங்கே பிரசங்க விரு ப்ப மெங்கே, கையாரக் கனிந்துதவுங் கொடையெங்கே யறமெ ங்கே கருணை யெங்கே, துய்யாய்நீ நினைந்திலையே லெவனுற்றுய் பழநியப்பச் சுமுக வாழ்வே. (கங)

எத்தனைபே ரினிப்பெரிய சபைகூட்டித் தனிசிறப்ப வியற்றி னாலு
மத்தனைபேர் பெறும்புகழு முன்புகழாக் கிக்கொண்டா யாத லாலே
நித்தியமாம் புகழுடம்பை நிலைநாட்டிப் பூதவுட னிலத்து வீழ்த்தாய்
சத்தியமாஞ் சன்மார்க்கசபைத் தலைவாநினைப்பிரிந்து தவிக்கின்றோமே

ஆயிரம்பேர் சபைத்தலைவ ரானாலு நினக்குநிக ராவா ருண்டோ, நீயிறந்தா யெனக்கேட்ட வக்கணமே யிந்நிலத்து நெடுஞ் சொல் வாணர், வாயிறந்தார் மதியிறந்தார் நிதியிறந்தார் துதியிறந் தார் வாழ்வி றந்தார், தாயிறந்தா ரெனமயங்கித் தவிக்கின்றார் பழநி யப்பத் தமிழ்வல் லோயே. (௧௫)

குலத்தவர்க ணகர்ப்பெயரைக் கொண்டமையா லதிற்சிறப்புக் கொள்ளல் காட்ட, நலத்தமைபஞ் சாக்கரத்தின் றலைமையுறு சிகர முத னண்ணும் வண்ணம், பலத்தமையுஞ் சிவனடியான் சிதம்பரஞ் சிங் காரவேற் பண்பார் நாமம், வலத்தமையுத் திரர்த்தந்து முதன் மையுற்றாய் பழநியப்ப வள்ளற் கோவே. (௧௬)

என்பிறப்பி லியற்கையொடு செயற்கைமுத லுயிர்த்துணைமை யெய்தும் பேரார், அன்புபரண் ணாமலைவேள் அருளருணா சல பூமன் அழகப் பப்பேர், மன்புனித கதிரேச மணியிவர்சன் மார்க்க சபை வளர்ப்பா ரென்றே, யின்புடைய பழநியப்பன் விண்புகினும் புகழுடம்போ டிவணுற் றானே. (௧௭)

தண்டமிழ்க்குச் சனிபுகுத்திப் பரிதபிக்க வந்தபரீ தாபி யாண்டு
முந்துமதி யிருபான்மூன் றாந்தேதி முதல்வார மொழிபின் பக்கங்
கொண்டதிதி பஞ்சமிபூ ராடமிர விருபதுடன் கூடு மேழு
கண்டநா ளிகையெமது பழநியப்பப் பூமன்முத்தி கலந்த நாளே. ()

மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத்.

மு. கதிரேசச்செட்டியாரவர்க ளியற்றியன.

——:0:——

மதியிருக்கும் பேரறிஞர் மகிழ்ந்தினிது சூழ்ந்திருக்க வதிவோய் நல்லோர், துதியிருக்கும் பழனியப்பத் தோன்றுனீ யிகவாழ்வைத் துறந்து தெண்ணீர், நதியிருக்குஞ் சடைப்பெருமா னுலகிருக்க நயந்தனையிந் நகரு மன்றேன், பதியிருக்கு முழுங்குசிவ புரியன்றோ வீங்கிருக்கப் பற்று யென்னே. (க)

பன்மார்க்கத் துறுநரெலாம் பயன்முடிவிற் பெறநின்ற பதினன்மார்க்கஞ், சன்மார்க்க மாமென்னுந் தத்துவந்தேற் றியவெழுந்திச் சகத்தோர் போற்றப், புன்மார்க்க மறவொழிக்குஞ் சன்மார்க்க சபைத்தலைமை பூண்டோய் சேறற், குன்மார்க்கம் பிறிதெங்ஙனுளதுகொலோ பழனியப்ப வுரைத்தி டாயே. (உ)

நிலவுலகத் துள்ளாரிற் புலவர்சிலரேயிவர்தா நெருங்கிச் சூழத், தலைமைபெறு தவிற்பெருமை சிறிதன்றி யிலதென்று தணந்து மேல்விட், புலவுலகத் துள்ளார்க ளெல்லாரும் புலவரெனும் பொருளில் சொற்கேட், டுலைவுறவவ் வமரர்சபைத் தலைமைபெறப் பழனியப்ப வுவந்தா யென்னே. (ங)

கல்லாரு மறநெறிக்க ணில்லாரும் பிறர்க்குதவி கருதா தென்றும், ஒல்லாத வினைபுரிந்தே யுயிர்க்குறுதி தேடாரு முறைநூல் கற்று, வல்லார்பல் லார்சூழ வவர்ப்புரந்து மகிழாருந் தன்பால் வாழப், பொல்லாத விவ்வுலக நினையிழத்த லறஞ்செய்த புன்மை தானோ. (ச)

அருணிறைந்த பழனியப்ப வண்ணலென் றனைக்காணி னலர்ந்து தோன்றும், தெருணிறைந்த முகமெங்கே யினிமைமிக நிறுத்துரைக்குஞ் செவ்வா யெங்கே, மருணிறைந்தார் தமைத்தெருட்டு மதியெங்கே வறியார்க்கு மகிழ வீயும், பொருணிறைந்த கரமெங்கே யிவைகாண வினியொருகாற் போந்தி லாயோ. (ரு)

கல்வினிலே நங்நாட்டிற் காண்பதற்கே யான்புரிந்த கருமச் சூழ்ச்சி, நல்வினையென் னுளங்கொண்டு விரைவின்முயன் றதன்பயனை நன்கு கண்டாய், செல்வினிலே பெறுந்தோளெம் பழனியப்பச் செம்மாலிச் சிறுகா லத்தே, பல்விபுதர் பாராட்டும் புகழ்பெற்றாய் போதுமெனப் படர்ந்தாய் கொல்லோ. (சு)

அரும்பிரசங் கம்புரியு மாற்றலுளார் பலர்சூழு மவையத் தெங்ஙனாய், தரும்பிரசங் கங்கேட்க விழைவுதின துளக்குறிப்பைத் தடுத்துங் கொள்ளாய், அரும்பிரச வன்புமலர்ந் திக்கழகத் திராண்டி னுன்றோர் முன்னர்த், தரும்பிரச மணையதின நுரைநிறுத்தி யுருமறைத்தாய் தக்க தாமோ. (எ)

ஆன்றவிசை யினிமையுற வருட்பாவோ துநரையரு கிருத்தியன்பு, தோன்றவிசை நன்பாட்டிற் குளமுருகும் பழனியப்பத் தோன்று லெங்குஞ், சான்றவிசை யணியுடையாய் விண்ணாட்டினிசைகேட்கச் சமைந்தா யிங்ஙுத், தோன்றவிசை யுணும்புலவோர் சொன்மகிழ்வோன் றமிழ்க்குருகல் சொலத்தே ராயோ. (அ)

சொற்பொருடேர் பழனியப்பத் தோன்றலிங் நிலப்புலவோர் தொகுதி யாளுங், கற்பொருவா மகிழ்ச்சியினும் விண்ணின்பம் பெரிதாயிற் காண்பா மென்ற, முற்பெரியா ருரைப்பொருளைக் காட்சியிற்கண் டங்குவர முன்னி யெம்பால், அற்பொருவிச் சென்றனையோ வதுதேர்ந்தெவ் வுடல்கொடுமீண் டடைவா யையா. (சு)

எவ்வுயிரு மிறுதியிற்கொ ளெண்ணமே பின்பிறத்தற் கேதுவாமென், றவ்வுரையின் பொருளுணர்ந்தும் பழனியப்ப வண்ணலிவ் வவையின் மாட்டுச், செவ்வனுற பேராசை தேங்கவுட னிவ்வினையே.சிவனார் பாதத், தெவ்வமிலா வின்பினுமிவ் வவைப்புலவோர் தருமின்ப மேற்ற மென்றோ. (கo)

கற்றவர்க்கோர் திணைத்துணையு முதவார்தாஞ் சமர்த்தரெனக் கருதி யொன்றும், பெற்றிலராய்ப் பலரிறந்தார் பழனியப்ப மாலையப் பேதி லார்நிற், பற்றிநல னுறப்புகழாம் பலவுடம்பைத் தமிழ்ப்பரிபா லனமாஞ் செய்ய, நற்றவத்தாற் பெற்றனைநீ முற்றறிவன் றிருவடிக்கீழ் நண்ணி வாழி. (கக)

வெண்பா.

மிக்க பரிதாபி மேட ரவியிருபான்
றெக்க வொருமூன்று சூழ்கதிர்நாட்—புக்கவிராப்
பூராடம் பஞ்சமியாம் போற்றும் பழனியப்பன்
நாரார் சிவனடிசேர் நாள்.

நாகை நீலலோசனிப் பத்திராதிபர் ஸ்ரீமத்.
ஜி. சதாசிவப்பிள்ளையவர்க ளியற்றியன.

—:o:—

பழனியப்பச் சுகுணஸ்ரீ பழனியப்ப நிர்க்குணன்பாற் படர்ந்தா யென்றே, தழனிரப்புந் தந்திவந்தே யழல்நிரப்பப் புந்திதடு மாறு நின்றேம், நிழனிரப்பு முலகதனிற் புகழன்றி யொன்றேனு மில்லா தென்றே, தொழனிரப்புஞ் சன்மார்க்க சபைநிரப்பிப் புகழ்பரப்பத் துணிந்தாய் நன்றே. (௧)

சன்மார்க்க சபைவைத்தாய் தமிழ்க்கழகந் தனைவைத்தாய் தளர்வு றுமற், கன்மார்க்க மாளிகையைக் கட்டுவித்தாய் தமிழ்க் கலைஞர் கழகங் கூட்டி, நன்மார்க்க நல்குவித்தாய் பழனியப்ப வண்பாநீ நக்கட் கின்னு, மென்மார்க்க மீய நினைந் தென்மார்க்கம் போயுளா யியம்பா யந்தோ. (௨)

மான்மணக்கும் கரத்தானை வாய்மணக்கப் பாடாமன் மதிகெட் டந்தோ, தேன்மணக்குந் தமிழ்ப்பாட்டைத் தினமணக்க யாம்பா டித் தேடிச் சென்றே, யூன்மணக்குஞ் செவிநுழைத்து மொருபய னு மீயாத வுலுத்த ரெல்லாம், வான்மணக்கா திருந்திடவு மணமண க்குங் கற்பகநீ மறைய லாமோ. (௩)

நாகைவந்தாய் லோசனியி னற்சாலை புகுந்தென்னை நட்புக் கொ ண்டாய், ஓகைதரும் பத்திரிகை யோயாம லுலவுதற்கு முதவி செ ய்தாய், ஈகைதரும் பெரியோர்கண் முகமனுரை யாதவர்க்கு மினி தே செய்தல், வாகைதரு நின்னிடத்தே வளர்ந்ததோ பழனியப்ப வள்ளற் கோவே. (௪)

சிந்நயவேள் சென்றுவிட்டான் சிதம்பரவேள் சென்றுவிட்டான் செம்மை யான,நன்னயஞ்சேர் நல்லரங்க நாதனெனு நட்டோனு நடந்து விட்டான், பன்னயங்கொள் பழனியப்பப் பண்பாளா நீகூடப் பறந்து விட்டாய், எந்நயங்க ளறிவதற்கு வணிகர்குலத் தியாருளர்நீ இயம்பு வாயே. (ரு)

பாட்டெழுதி னற்கூடப் பதிலெழுதாப் பாமரர்கள் பாரி லுண்டே, யேட்டெழுதி யனுப்பினுமே யென்னவென வெழுதாதா ரெங்கு முண்டே, நீட்டெழுதும் புகழாளா பழனியப்ப நேயநினை நேயங் கொள்ளச், சீட்டெழுதிச் சிவபெருமான் சிறுபொழுதுந் தாழ்க்காமற் சேர்த்தான் கொல்லோ. (சா)

தஞ்சை தமிழ்முனிஷி ஸ்ரீமத்
கோவிந்தசாமிபிள்ளையவர்களியற்றியன.

:0:

கழநிதுய்ப்பக் கடைசியர்க ளார்ப்பரிப்பக் கவின்செய்யுங் கார்கொண் மூவாற்,றுழனியுய்ப்ப நிறைபொதும்பர் சூழ்மேலைச் சிவபுரியிற் றாயோ யெம்மான், கழனினைப்ப தல்லாது வேறுநினைப் பறவாழ்ந்து கயிலை சேர்ந்த, பழநியப்ப வள்ளானீ யெனதுமனத் தெழும் பனுவல் பகரக் கேண்மோ. (க)

தென்மார்க்கஞ் சிவமார்க்க மலதுபிற மார்க்கமெலாந் தெளிவுறுத, புன்மார்க்கம் புலைமார்க்க மெனமேலைச் சிவபுரியிற் பொருவிலான்ற, சன்மார்க்க சபைநிறுவிச் சார்ந்தபெரும் புகழ்பரப்பிச் சலிப்பிலாமற், பொன்மார்க்கத் துறையொழுகிப் பொதுமார்க்கத் தரன் கழலிற் பொருந்தி னாயோ. (உ)

உலகமது புகழ்ந்தோத வறத்துறையும் வைசியர்க்கு ளொப்பில்லாத, திலகமென வுயர்மேலைச் சிவபுரியி னனிவாழ்ந்து திகழ்ந்து பாங்கா, யிலகுபுகழ்ப் பழநியப்ப வள்ளலே யிகத்தாசை யிகந்தெல்லாமும், விலகும்வழி தனைக்கண்டு மெய்ஞ்ஞான வீடதனை மேவினாயோ. (ங)

செப்பமுற வேதியர்க்கும் பாவலர்க்குங் கொடுத்துமிடி தீர்த்த ன்னோர்க்குத், தெப்பமென நேர்ந்துகதி சேர்ந்தனையோ பழநியப் பச் செம்ம லேநின், இப்பரொடு நண்பரெலா மெப்பொழுது காண்ப தென விரங்கி யேங்க, அப்பரனடைந் திடுசதயம் வருமுன்ன ரவரிடத்தி லணுகி னையோ. (௪)

சொல்லரிய சிவகணங்க ளரகரவென் றேதிசிற்குந் தோற்றங் காணச், செல்லரிய கயிலாயத் தம்மையொடு வீற்றிருக்குந் தேவை நாடி, ஒல்லெலனச்சென் றுகந்தனையே யினியுலகி லுன்றனையே யோ கோ நானும், நல்லதம்பி யானவரு நம்பினரு மினிக்காணு நாளெந் நாளோ. (௫)

சோக்கலிங்கம்புத்தூர் ஸ்ரீ மாணிக்கவாசக வித்தியாசாலைத் தமிழ்ப்போதகர்

ஸ்ரீ செ. ராமமூர்த்தியையரவர்களியற்றியன.

——:o:——

பாவலர்களோரிடத்திற் பலர்கூடி யிருக்கவவர் பானீ யன்பான்
மேவியுப ரமுதமொழி பகர்ந்துநகு தலினுமிக விழுமி தென்றே
பூவலருங் கற்பகநா டுற்றனைநின் கருத்தறியேம் புகலா நிற்பாய்
தாவிலருஞ் சன்மார்க்க சபைக்கதிபா பழநியப்பத் தமிழ்வல் லோனே.

வருகவுபர் சன்மார்க்க சபைக்கெனவே யழைக்கின்ற வாய்தா னெங்கே, தருகெனுமு னிருநிதிய மிரவலருக் குதவுதிருத் தடக்கை யெங்கே, முருகருக சிவசிவெனவே மொழிந்துவலம் வருந் துணைத்தாண் முளரி யெங்கே, யுருகுமெம துளங்குளிரப் பழநி யப்ப வள்ளானீ யுவந்து காட்டாய். (௨)

செந்தமிழை நனிவளர்க்கும் புரவலன்பாண் டித்துரைசீர்ச் சிவலோ கத்திற், சிந்தநிலந் தனைபகன்று சென்றதனை லெய்துதுய ராறு முன்னஞ், சந்தமுறும் பழநியப்ப வாரமுதே நீயுமெமைத் தணந்தா யென்றே, லெந்தவிதத் தினியுய்வோ மெவரிடத்தெங் குறைசொல்வோ மியம்பி டாயே. (௩)

கண்ணுக்குக் கண்ணான கதிரேச மாமணியுங் கவிவல் லோரு, மெண்ணுக்கு ளினைமிகவு நினைந்துநினைந் துருகச்செய் தெவரும் போற்றும், விண்ணுக்கிச் சிறுபருவந் தனிற்சென்று பீதுமுறை யோ விளம்பா யையா, மண்ணுக்குட் சைவமெனும் பயி[illegible]ரநனி வளர்வித்த மழைக்கை யானே. (ச)

உலகுபுகழ் வணிககுலத் துதித்தெவரும் போற்றநல மொரு ங்கே வாய்ந்து, பலகலையுங் கற்றுணர்ந்து பெரியருட னெஞ்ஞான் றும் பழகி நின்று, நிலவிவளர் சன்மார்க்க சங்கநிதி யெனவிருந்திந் நிலத்தை நீத்தே, யலகில்புக ழரனடியை யடைந்தோனே பழனி யப்ப வரசே வாழி. (ரு)

மேலைச்சிவப்பட்டி. கணேசர் செந்தமிழ்க் கலாசாலைப் போதகாசிரியர்

ஸ்ரீ மு.சிங்காரவேற்பிள்ளையவர்களியற்றியன.

—--:o:——

திருவுடைய வணிகலமே யருஞ்செல்வப் பெருங்கலமே திசைக ளெட்டு
மருவுடைய பெரும்புகழி னருங்கலமே பெரும்புலவர் மாண்பின் வாழ்வே
தருவுடைய வழக்கருளின் கொள்கலமே பழநியப்பத் தலைவா வந்தோ
வொருவியநீ யூன்புக்கு முயிர்புக்கு முணர்புக்கு முளைவித் தாயே. (க)

தறையொன்று மொளியாகத் தயங்கியநற் பழநியப்பத் தலைவா நின்றன்
கறையொன்று மில்லாத களிமுகத்தைக் கண்டோர்ன் கவலும் போது
குறையொன்று மின்றுமா னின்றனக்கா மெனப்புகன்ற குணந்தா னெங்கே
யிறையொன்று மில்லாத பறவைபோ லானேனே யிசைவ தாமோ. (உ)

பாவரையும் பாவலர்க்குக் காவலரெல் லாநீயாப் பரிந்து வந்தே
யேவரையும் விடுத்தியா னினையடுத்தே னெனைவிடுத்தா யென்மன் னுவோ
காவரையு மிந்திரனும் புந்தியையும் புகழ்ச்செல்வங் கைத்துப் போனய்
சேவரையு முன்பற்கன் பியல்பிஃதோ பழநியப்பச் செம்மா லம்மா. (ங)

போற்றெருணைப் புகழ்படைக்குந் தமிழ்க்கல்வி தேர்ந்துவந்த புலவ ரெல்லா
மாற்றெருணைப் பொன்படைத்துத் தமைப்புரந்த பல்லோரை வரைந்த நாளா
லாற்றெருணத் துயர்க்கட லினுழ்ந்ததற்கோ ரரும்புணையாயமைந்தாயென்றே
பாற்றெருணைக் களிப்புற்றார் பழநியப்ப நீயகன்று றற் பகர்வ தென்னே. (ச)

மண்ணிறைந்த புலவர்தமை யொருங்கழைஇப் பெருங்குழுவா மகிழ்ந் தெந் நாளும், எண்ணிறைந்த சன்மார்க்கப் பொதுப்பாலின் றமிழமிழ்தி னினிமை தேர்ந்து, விண்ணிறைந்த புலவருணுஞ் சுவையமுதுந் தேர்ந்

தழைக்க விரைந்தா யோவென், கண்ணிறைந்த கவின்பெற்றாய் விண்புகுந் தாய் பழநியப்பக் காவ லோயே. (ரு)

தன்மார்க்க நின்றுழலும் பகையொதுக்கிக் கலைஞரேந் தமிழ்மா மாதைச்
சன்மார்க்க மதினடத்திக் கற்பினையுங் காத்தளித்த தலைவா நீயே
புன்மார்க்க மில்கற்பு மிறையினா மென்மொழிக்கும் புகலா னாயே
யென்மார்க்கம் போந்தாயென் சிந்தையினாம் பழநியப்ப வேந்தா லந்தோ. (சு)

எண்ணீர்மை யின்னண்பர் கிளைமக்கள் குடியாவா ரெவர்க டாமுங்
கண்ணீர்மை முகங்காட்டிக் கலக்குறவு மிழுக்காகுங் கருணைக் கென்றோ
வுண்ணீர்மை யொன்றேனும் புகன்றிலா தகன்றனையே யொருவர்க் சேனுந்
தண்ணீர்மை யகலாத பழநியப்ப வள்ளாலே தணப்ப தேனோ. (எ)

பொதுநலனே யாவர்க்குங் கடப்பாடாம் புண்ணியமாம் பொருவி லாத பொதுநலனா மெனத்தெளியப் பொதுவிறையாய்க் காட்டியவெம் பொருவி லோனே, கதுமெனநீ மறைந்தாயே பழநியப்பக் காவலவோ காண்டு மீண் டே, யிதுநலனா யிசைந்தபொதுத் தொழிலோரைச் சோதிப்பா னெழுந் தாய் கொல்லோ. (அ)

மண்ணைத்தான் மறுவிலாத் தம்பியைத்தான் மக்களைத்தான் மடவில் லாளாம், பெண்ணைத்தான் பொன்னைத்தான் நண்பரைத்தான் கிளையைத் தான் பெற்றா யாதுங், கண்ணைத்தான் மறந்தனையே யென்றாலும் பொது நலனாய்க் கணக்கி லாத, வெண்ணைத்தான் மறந்தனையோ பழநியப்ப வேந் தாலோ வெவண்போந் தாயோ. (கூ)

அண்ணாலோ மண்ணின்மே லமைந்தகுண நினக்கமைந்த வழகா வென் றும், பண்ணாலே வாழ்த்துநாற் றிசைப்புலவர் பறவைபோற் பழநீ யென் றே, விண்ணாலு மதிக்கரிய வருகையையும் விடுத்தகன்று விண்போந் தாயிவ், வெண்ணாலே விண்புலவர் விருந்தாகப் பழநியப்ப விரைந்தாய் கொல்லோ. (கo)

ஒருவாத பரிதாபிப் பலனாகப் பழநியப்ப னொருவிப் போந்து, வெரு வாது பொதுநலத்தை யுயிர்க்குயிரா யுள்ளுணர்த்த வேண்டு வான்போற், பொருவாத மேடமிருட் பஞ்சமிபூ ராடமுதற் போந்த வாரங், கருவாதை கழித்தருள்செய் கண்ணுதலான் கழலடியிற் கரந்தான் வாழி. (கக)

வலயபட்டி ஸ்ரீ

வயி. வ. இராமநாதச் செட்டியாரவர்கள் பாடியவை.

——:o:——

சான்றோரின் கூட்டுறவாற் சாந்தமிகு சபைமுதலாந் தமிழின் சாலை, ஆன்றோரின் முற்பழக்கத் தமைந்தகுணந் தவப்பேற்றா லடு த்து ஞானர், வான்றோறும் பேர்பரவ வந்துதித்த பழநியப்ப மகி பா மின்னல், தான்றோன்றி மறைந்ததுபோன் மறைந்தனையே தண் ணளியாய் சாற்று வாயே. (க)

சொல்லவொண்ணுப் பேர்படைத்துத் துலங்கியபே ரறிவுடை யாய் சுற்றம் யாரும், எல்லையில்லாத் துயருறவே யிவ்விளமைப் பிராயமதி விகத்தை விட்டுத், தொல்லைவினைக் கட்டறுக்க வுயிர்துறந் தா யுன்செயலைச் சொல்லுந் தோறுங், கல்லுமிக வுருகுமென்றாற் கசிந்தமன முருகுவது கணக்கோ அந்தோ. (உ)

வேறு.

உன்செயலை யுரைத்திடுதற் குலகத் துள்ளோ ரும்பருக்கு முடியாத வுயர்வி லுள்ளோய், முன்றவத்தா லவதார மாகி மேலா முறைகாட்ட வணிகர்குலத் துதித்தா யிங்கு, தன்குலமு மயற்குல மும் கூடி வாழுந் தகமையெல்லாஞ் சபைமூலஞ் சாற்றிக் கல்வி,அன் புடனே நீடூழி வாழச் செய்த அறிவுடையாய் நீயகன்ற தழகோ சொல்லாய். (௩)

கற்றவமே நாட்கழிக்குஞ் சிலர்போ லாது சங்கையணி சடைப் பரனைக் கருதிச் செய்த, முற்றவத்தா லிவ்வூரிற் சாமி நாத முதல் வனுக்குப் புத்திரனு வந்தெம் மோர்க்கு, நற்றவத்தைப் போதித்துக் கவிகை சாந்த நல்லறிவு கொலைமறுத்தல் நட்பு முன்னு,மற்றெவையு மனுமுறையிற் றெரியவைத்த வள்ளலுனை வையமினி மறப்ப தெங்கே. (௪)

இச்சபையா லிவ்வூரின் பெயர்தா ஞேங்கி யெங்குமது சிவபுரி யா யியங்க வைத்தே, அச்சபைக்கு முதல்வனென நீயே யானுய் ஆதரவு மிகவுடையா யார்க்கு மேன்மைப், பட்சமுளாய் கவிவாணர் செல்வர் ஏழை பலருக்கு முபகாரம் பண்பாச் செய்தாய், எச்செய லு மறிந்தநின்ற னுருவந் தன்னை யெப்பிறப்பிற் காணுவதோ இய ம்பி டாயே. (௫)

தூத்துக்குடி, சைவ சித்தாந்தசபை, உப அக்கிராசனுதிபதியும்
சைவப்பிரசாரகருமாகிய

ஸ்ரீ. பொ. மு. முத்தையபிள்ளையவர்கள் இயற்றியன.

:0:

தனவணிகர் நாட்டிற்கோர் திலக மாகிச் சைவசம யம்வளர்க் கத் தான்சிந் தித்துத், தனவணிக ரும்பிறரு மங்க மாகச் சன்மார்க்க சபையினைத்தா பித்து நல்லார், மனமகிழப் பொருளுடனே யருளு மீந்த வள்ளாலென் னுயிர்த்துணைவா பழனி யப்பா, மனமுருகி யென்றனுளங் கலங்க வின்ருண் மாநிலத்தைத் துறந்ததென்னே வழுத்தி டாயே. (க)

துணைவர்மன முருகவுற வினர்கள் வாடச் சூழுலகெல் லாம்வா டச் சேய்கள் வாட, இணையில்சிவ னடியொன்றே பொருளென் றெண்ணி யிவ்வுடலை நீத்ததுதான் முறையோ தேவ, மணமிகுசன் மார்க்கசபைத் தலைவா மேலோர் மனத்துள்ளா மிருப்பவனே பழனியப்பா,கணமுந்தாழ்க் காதுவந்து கவலை தன்னைக் கழிப்பாயோ மறுப்பாயோ கழறு வாயே. (உ)

சன்மார்க்கர் புடைசூழத் தன்னைத் தேறிச் சச்சிதா நந்தமதே தானாய் வாழச், சன்மார்க்க சபையிருக்கக் கதிரே சப்போர்த் தமிழ் வல்லோன் ருனிருக்கத் தரணி நீத்த, தென்மார்க்க மிதுதகுமே வின்னுஞ் சின்ன ளிருக்கினுள குறையெவையோ பழனி யப்பா நன்மார்க்க மலதறியா மேலோய் நாங்கள் நலிவுறுதல் தருமமோ நவிற்றி டாயே. (ஙூ)

வெண்பா.

நன்மைபெறச் சன்மார்க்க நற்சபையை நாட்டியதாற்
பன்முறையான் வாழ்த்தல் பழனியப்பா—வென்கடனும்
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

தூத்துக்குடி சைவசித்தாந்தசபைக் காரியதரிசி

ஸ்ரீ தெ. ச. சுப்பிரமணியபிள்ளை யவர்களியற்றியன.

——:o:——

பழனியப்பன் சிவபுரிக்கு வந்ததெதன் பொருட்டென்னிற் பகர்துங் கேண்மோ, வழனிறச்செஞ் சடையகத்தி யர்க்குமுனந் தணிகைதனி லருள்சன் மார்க்க, கழகமதை நிலவுவித்தே யதன் வழித்தா யெவரையுஞ்சங் கரன்றன் பாத, நிழலமரும் பக்குவரா நெறிசொல்லும் படிசெலுத்து நிமித்த மொன்ருல். (க)

தனவணிக ராகியதங் குலத்தவர்க ளுபார்ந்தசிவ தரும மெண் ணில், தனம்வழங்கிப் புரிவதுபோற் சமையபோ தனைபுரியுஞ் சாலை தன்னைத், தனநிறையு நகரமெலாந் தாபனஞ்செய் தாங்காங்குஞ் சமைய போதந், தனமுளரோ டில்லார்க்கும் பயிற்றுவிப்பான் றாண் வேது நான்மற் றென்றே. (உ)

செபற்கரிய விச்செயலைச் செயவந்தோ னிவணகன்றேன் சென்று னென்னில், அயர்ச்சியின்றி யவைசெய்யுஞ் சபைசாலை யங்கிகளா டமைந்த தாலும், உயர்ச்சிபெற வவைவளர்ப்பக் கதிரேச ஞதியர்க ளுண்மை யாலு, முயற்சிதிரு வினையாக்கல் கண்கூடாய்க் கண்டுமுத்தி முயங்கத் தானே. (௩)

ஷை சைவசித்தாந்த சபையின் ஓர் அவயவி த. ஜோதீர்ப்பிரசாதம் ஸ்ரீ ஆட்கொண்டார்பிள்ளையவர்க ளியற்றியன.

—:o:—

பூதலத்தைப் பிரிந்தவரைப் புண்ணியரென் றேயுலகம் புசலக் கேட்டா, யாதலினு லம்மேலைச் சிவபுரியே அழகியதென் றமிழ்தே யென்னுங், காதிலினம் பழனியப்ப கண்ணியநீ எம்மைவிட்டுக் கரந்தாய் என்பேன், போதலுநிற் காகாது புகழுமடந்தை யென்னாளும் போற்ற லாலே. (க)

வாட்கொண்ட கண்ணுமையாள் மாதேவன் வார்கழலான் மாட்டப் பட்ட, நாட்கொண்டு சிவநாம நாவுடையார் தனைமத்தருமன் நாணி யன்னர், தாட்கொண்டு நின்றிடநந் தார்மேலைச் சிவபுரியிற் சன்மார்க் கத்தே, ஆட்கொண்ட நம்பழனி யப்பனுமே யுயிர்துறந்தா னுத லென்னே. (உ)

பன்மார்க்க முளதெனினும் பதிமார்க்க மிதுவெனவே பகருமார்க்கம், நன்மார்க்க மெனக்கொண்டு நம்பழனி யப்பனெனு நம்பன் றுனும், சன்மார்க்க சபைமேலைச் சிவப்புரியிற் றுபித்தான் தாபிப் பானை, என்மார்க்கங் கொண்டனனென் றென்மார்க்கங் கொண்டிரங்க லெற்றுக் கம்மா. (௩)

செட்டியார் என்பவர்தந் தேனெழுகும் வாயிருப்பன் சித்திரத்துக், கெட்டியாய்த் தானிருப்பன் கேடில்லா வன்பர்மணக் கிழியில் நல்ல, திட்டமாய் முன்னிருப்பன் சிர்மேலைச் சிவபுரியிற் சிறந்து வாழ்ந்தே, இட்டமா யவனிருக்க இல்லையென விரங்குவது மெற்றுக் கம்மா. (௪)

கட்டியபூ வாடாதாற் கால்நிலத்திற் றோயாதாற் கண்ணுங் கண்டு, கொட்டுதலு மில்லாதாற் குறைதீர்ந்தோ மெனுந்தேவர் குழாமே நீவிர், பட்டதுயர் போதாதா படமுடியா தென்பீரேற் பழனியப்ப, செட்டியரும் வருகின்றார் சென்றழைத்துப் போவது நும் சீர்த்தி தானே. (ரு)

ஷை சைவசித்தாந்த சபையின் புத்தகசாலாதிபர் ஸ்ரீ காருடை

சு. சூரியமூர்த்தியாபிள்ளையவர்க ளியற்றியன.

:o:

நெருநலுள னொருவனின்றிங் கில்லையென்னும் பெருமைத்திந் நிலம தேனும், அருமையறி வருளுடையார் பலர்குழுமச் சிறுமறி வடைந்து வாழும், பெருமையுறப் போய்ப்பணியச் சன்மார்க்க சபைநிறுவிப் பீடார் கல்விக், குரிமையுடன் பொருளளித்த பழநியப்பா ஆலயச்சீர் உஞற்றி னானே. (க)

தோன்றுவதெல் லாமழிவாம் அளவைகொண்டு தூலம்போம் துயரோ னென்னில், என்றமுறைச் சிவதருமம் பலவறிவின் வழியியற்ற இதத்தோ டியார்க்குஞ், சான்றுதய வாய்ப்பகரத் தக்காரைக் குழுமவைக்கச் சரியாய்க் காண்பான், தோன்றிவரு மோபுரியட் டகவுடம்பும் இனியிதற்கென் சொல்லப் போமே. (உ)

முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்றோர் செம்பொருளை முறையே நாடத், தப்புறுக் கைகூட அஞ்செழுத்தின் துணைபிடிக்கயாப்புத் தாழ்க்கே, எய்ப்புறு தெவ்வுயிருஞ் சிவனடியே யிசையுமென எடுத்துக் காட்டி, முப்பத்தோன் பதிற்சென்றாய் சரியெனினும் பிரிவாற்றே மொழிவ தென்னே. (ங)

ஷை சைவசித்தாந்தசபை இலிகிதர்

ஸ்ரீ ந. சிவ தருநாதபிள்ளை யவர்களியற்றியது.

:o:

சிவதருமமுஞற்றினதாற் சிவபுரிக்க ணுறைந்தனன்பின் சிவனார் ஞானத், தவமருவுந் தன்மையினாற் றன்னியல்பாஞ் சிவத்துடனென் றிரண்ட தல்லா, உவமையறு முத்தியிடைப் பழனியப்பன் கலந்தனனா லுலகீர் நீவிர், அவனமரை யகன்றனனென் றலமருத லென்னோவிங் கறைகுவீரே.

வலயபட்டி விநாயக வித்தியா சாலைத் தமிழ்ப் போதகாசிரியர்

ஸ்ரீ. நெ. திரு. இராமசாமி ஐயங்காரவர்க ளியற்றியன.

செந்தமிழ்க்குத் தாயாய்த் திகழ்புலவர் நற்றுணையாய்
நந்தம் மாபி னுதலணியாய்—வந்த
பழநியப்ப னுந்துறக்கம் பற்றினு னென்னில்
அழநினைக்க வென்னுளவோ ஆறு. (க)

பாட்டினியல் பசுந்தமிழை விசும்பமுதிற் பலபுலவர் பகரச் சீர்சால், கோட்டிமிகு சன்மார்க்கப் பெயர்கொளவை யொன்று நிறாவுங் குழுண னென்னுர், மாட்டுநிறை யருண்மிகுமேம் பாட்டினுயர் பழநியப்ப வணிகன் விண்ணோர், நாட்டினனுப் புகழ்நிலக்க ணட்டியிறந் தமைக்கெனுள நலியு மாலோ. (உ)

திசைவளரும் புகழ்மேலைச் சிவபுரிக்க ணறிஞர்பலர் சிறக்க நீநல் லிசைவளரும் படிபுரிந்த சன்மார்க்க சபைபோல வியற்று வார்யார் குசைவளரு மதியன்பு கொடையொடுயர் பழநியப்பக் கோமா னே விண், மிசைவளருந் தவப்புலவர் விளங்கவையி னலங்காண மேயி னுயோ. (ங)

வணிகர்தமிற் றமிழ்வளர்த்துப் பெரும்புகழ்கொள் பழநியப்ப வள்ளால் நின்கண், மணிநிகருங் கதிரேச னுதியவண் புலவர்களான் மகிழ்ந்து சூழ்ந்துற், றணிகெழுநல் லவைவெறுத்தந் தரம்புகுந்த தந்தரங்கொ லன்பா வான்றோர், தணிவில்பெரு மையைவிண்ணோர் தமக்குணர்த்தச் சென்றனைகொல் சாற்று யந்தோ. (ச)

தாயிலாக் குழவியெனத் தனித்தமிழுஞ் சன்மார்க்க சபையும் யாமும், நீயிலாக் குறையெண்ணி நெஞ்சுருகிக் கண்பனித்து நிற் கின் றேமவ், வேயிலாக் குறுதடந்தோள் மெல்லியலார் விரும்பழகா வேட்டு நின்னைக், கோயிலாக் கியநினைந்தோ வவன்பதஞ்சார்ந் தனை நின்றன் குணந்தா னென்னே. (ரு)

மேலைச்சிவப்பட்டி சன்மார்க்கசபைக் காரியதரிசி வித்துவான்

ஸ்ரீ மு. கும. குமரப்பச் செட்டியாரவர்களியற்றியன.

—:o:—

நந்தா விளக்கே சிவபுரிக்கு நடுநா யகமே நாவலர்க்குச்
சிந்தா மணியே யெனக்குரிய சிநேகா சாமி நாதன்முதன்
மைந்தா வுலகிற் சன்மார்க்க மருவச் சபையை வளர்த்தவையா
அந்தோ விடையிற் கைவிட்டே யமர ருலக மடைந்தனையோ. (க)

ஆய்ந்தோர் புகழும் பழநியப்பா வடுத்த மனையி லிருக்குமெனைத்
தோய்ந்த வன்போ டினிதழைத்துச் சொல்வாய் புராண மென்பாயே
மாய்ந்தா யந்தோ முன்போல மாசில் பன்னூல் படித்துரைத்தே
யேய்ந்த பொழுது போக்குவதற் கெனக்கோர் துணைதா னினியாரே.

உலகிற் புகழை யுனக்காக்கி யுயர்தென் கலையில் வடகலையில்
மலய முனியைச் சமமாக்கு மகிபா லபுரிக் கதிரேசன்
நலமிக் குறவு நயந்ததினும் நன்றே நாகர் நல்லுறவு
சலமிங் கெவரு முறநீயுஞ் சார்ந்தாய் வானஞ் சாற்றுதியே. (ங)

கூட னகரிற் றமிழ்ச்சங்கம் கூட்டும் பாண்டித் துரைமாண்ட
பாடு தொலையு முனநீயும் பட்டா யென்றாற் புலவர்மனம்
வாடும் பரிசு வகுத்துரைக்க வல்லார் யாரே வணிகரமர்
நாடு விளங்குஞ் சன்மார்க்க நவிலுஞ் சபையி னுயகமே. (ச)

மன்னு மனையின் றிருமுகப்பில் மருவு மணியா சனத்தினிது
அன்ன மருந்தும் பொழுதன்றி யகலா தறிஞர் புலவர்குழாம்
துன்ன விருக்கும் பழநியப்பா சுவர்க்கம் புகுந்தாய் நீயெனிலப்
பன்னு மிருக்கை தனிலிருக்கும் பான்மை யோர்யார் பகருதியே. ()

வல்லா ரெல்லாஞ் சிக்கல்நகர் வடிவே லவன்மேற் கவிதொடுத்துப்
பொல்லாக் கொடுநோய் நினையகன்று போமா றேற்றிப்போற்றியுமே
சொல்லா முன்ன மடியர்மனத் துயரந் தவிர்த்துக் காத்தருளும்
அல்லார் கண்டன் றிருமகனு ரருடான் புரியா ததிசயமே. (சு)

வேறு

புலவரெலா நின்னகரிற் போந்துபசும் பொன்பெற்றுப் போனா ரந்தோ
புலவரூர் நீபுகுந்த புதுமையென்னோ சிவபுரியும் புனிதம் வாய்ந்த
தலைமைபெறு சன்மார்க்க சபையினொடு கற்றவர்தஞ் சார்பு நீங்கி
யிலகியபே ரறிவுடையா யியம்புகநீ யெம்மனோர்க் கிசையு மாறே.

—